Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இணைந்து விட்டீர்களா?

நிலவு .com in

யாழ் Online

275, யாழ். வீதி,
மானிப்பாய்.

T.P.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 02 (15.11.2004) திங்கட்கிழமை இதழ்:46

## இராணுவ பவுசர் மோதி இளைஞன் பலி

# எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள்

# கண்மூடித்தனமாக தாக்கப்பட்டனர்

## கொடிகாமத்தில் பதற்றம்; போக்குவரத்து பாதிப்பு



உயிரிழந்தவரின் சடலம்



சடலத்தை அகற்ற முனையும் படையினர்



எதிர்ப்புத் தெரிவிக்கும் பொதுமக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி - கொடிகாமம் பகுதியில் இராணுவத்தினரின் தண்ணீர் பவுசர் மோதி மோட்டார் சைக்கிளில் சென்ற பூசகர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து அவரது சடலத்தை அந்தப் பகுதியிலிருந்து அவசரமாக அகற்றுவதற்கு படையினர் முற்பட்டபோது அங்கு கூடிய பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களைக் கலைக்க படையினரும் பொலிஸாரும் நடத்திய கண்மூடித்தனமான தடியடி மற்றும் கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல்களில் பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொழும்பு செல்லும் தனது சகோதரரை முகமாலை சோதனைச் சாவடிவரை ஏற்றிச்சென்று இறக்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த கல்வியங்காடு - மடத்தடியைச் சேர்ந்த 24 வயதான வரதராஜ குருக்கள் ஹரிஹர சர்மா என்ற இந்து மதகுரு (12 ஆம் பக்கம் பார்க்க)

## முக்கியஸ்தர்கள் வெளியேற்றம் டக்ளஸ் ஏற்றுக்கொண்டாராம்!

## புலிகளின் யோசனையை ஜனாதிபதி பரிசீலிக்கிறார்!

# முக்கியஸ்தர்கள் வெளியேற்றம் டக்ளஸ் ஏற்றுக்கொண்டாராம்!

## இணையத்தளம் தகவல்

ஈ.பி.டி.பி.யிலிருந்து முக்கியஸ்தர்கள் சிலர் வெளியேறி வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மறைமுகமாக ஏற்றுக்கொண்டிருப்பதாக இணையத்தளச் செய்தியொன்று தெரிவித்தது.

ஜெகன், நிசாந்தன், பாஸ்கரன் ஆகியோர் விடுமுறையில் வைத்திய தேவைக்காக சென்றுள்ளனர். அவர்கள் விரும்பினால் விலகலாம் அல்லது சேரலாம் இது அவர்களுக்கு மட்டுமல்ல பொதுவான ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஜெகன் எனப்படும் கே.வி. குகேந்திரன் யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் என்பதும், ஜி.பாஸ்கரன் - அற்புதன் படுகொலையின் பின்பு தினமுரசு ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதும், நிசாந்தன் எனப்படும் எஸ்.மணிபல்லவராஜன், நல்லூர் பிரதேசசபை முன்னாள் தலைவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்களைத் தவிர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஒரு காலகட்டத்தில் மிக் நெருக்கமானவராக இருந்த மதனராஜன் உளளிட்ட வேறு பலர் கருத்து முரண்பாடுகளால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்!

## கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் உள்ள நிர்வாகக் கட்டமைப்புகளை ஆட்சியாளர் ஏற்கவேண்டும் என்று கலாநிதி குமார் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

சமாதான ஆய்வகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்தரங்கில் நேற்று மாலை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 56 ஆண்டு கால வரலாற்றை எடுத்துப்பார்க்கும் போது எமது நாட்டுவரலாற்றிலே ஆட்சியிலுள்ள கட்சி ஒரு முடிவு எடுக்கும்போது எதிர்க் கட்சி அதற்கு எதிராக செயற்படுகின்றது.

1957ஆம் ஆண்டு பண்டா- செல்வா ஒப்பந்தம் எதிர்க்கட்சியின் எதிர்ப்பு காரணமாக கிழித தெறியப்பட்டது. அதன் பின்பு நாங்கள் அண்மைக்கால வரலாற்றை (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் யோசனையை ஜனாதிபதி பரிசீலிக்கிறார்!

## அரச சார்புப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக புலிகளால் முன்வைக்கப்பட்ட புதிய யோசனைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானசெயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தலைமையில் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருவதாக அரச சார்பு ஆங்கிலவார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் அன்றையதினம் மாலை கொழும்பு திரும்பினர். இவர்கள் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது (12 ஆம பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் கப்பல்கள் மூலம் அவசர ஆயுதங்கள் இறக்குமதி!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்த இரு பாகிஸ்தானியக் கடற்படைக் கப்பல்களில், இலங்கைப் படையினருக்குத் தேவையான அவசர ஆயுத தளபாடங்கள் ஏற்றிவரப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் கடற்படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

பி.என்.எஸ். நாசர் மற்றும் பி.ன்.எஸ்.தாரிக் ஆகிய கப்பல்களே நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தக் கப்பல்களில் ஜனாதிபதி சந்திரிகாவின் வேண்டுகோளின் அடிப்படையில் படையினருக்கு அவசரமாகத் தேவையான ஆயுத தளபாடங்கள் ஏற்றிவரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று நாட்கள் தங்கியிருக்கும் இந்தக் கப்பல்களில் இருந்து ஆயுதங்களைத் துரிதமாக இறக்குவதற்கு கொழும்புத் துறைமுகத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அத்துடன் இந்தக் கப்பல்களில் பெருமளவு ஆயுதங்கள் ஏற்றிவரப்பட்டுள்ளதால் துறைமுகத்தில் விசேட அதிரடிப்படைப் பிரிவினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் கடற்படையின் இரு கப்பல்கள் நல்லெண்ண விஜயமாக கொழும்பு வருவதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொடரும் மழையால் ஏ-9 வீதி சேதமடைந்துள்ளது

அண்மையில் பெய்த மழை காரணமாக ஏ-9 வீதியில் ஆசைப் பிள்ளை ஏற்றம் தொடக்கம் கொடி காமம் வரையிலான பகுதி வெகு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வீதியில் பாரிய குழிகள் ஏற் பட்டுள்ளமையால் இந்த வீதியால் போக்குவரத்து செய்யும் வாகனங் கள் வெகுசிரமத்தின் மத்தியி லேயே போக்குவரத்தை மேற் கொள்கின்றன. (21)

## மாவீரர் நாளை முன்னிட்டு பயன்தரு மரங்கள் விநியோகம்

வலிகாமம் தென்மேற்கு மானிப் பாய் பிரதேச சபையில் மாவீரர் நாளை முன்னிட்டு பயன்தரு மரங் கள் வழங்கப்படவுள்ளன. பிரதேச சபைக்குட்பட்ட பொது அமைப் புக்கள், சனசமூக நிலையங்க ளுக்கே மாவீரர் எழுச்சி நாட்களில் இவை வழங்கப்படவுள்ளன.

சமண்டலை, கமுகு, தேக்கு ஆகிய பயன்தரு 250 மரங்கள் வழங்கப்படுமெனவும், அறிவிக்கப் பட்டவர்கள் உரிய காலத்தில் மரங் களைப் பெற்றுக்கொள்ளுமாறு மானிப்பாய் பிரதேச அதிகாரி ஒரு வர் தெரிவித்தார். (91)

## பஸ்தரிப்பிட வெள்ளத்தால் பயணிகள் சிரமம்

சாவகச்சேரி நகரின் பஸ் தரிப் பிடத்துக்கு முன்பாக பஸ்வண் டிகள் நிறுத்தும் இடம் பெரும் குன் றும் குழியுமாக காணப்படுவத னால் பஸ்தரிப்பிடத்திற்குச் செல் லும் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மழை காலங்களில் பொது மக் கள் எதிர்நோக்கும் சிரமங்களை நீக்க சம்பந்தப்பட்ட திணைக்க ளங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டு மெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (29)

## தற்காலிக பாதை மழையினால் சேதம்

நாவற்குழி பாலம் திருத்தி அமைப்பதற்காக பாலத்தின் கிழக் குப்பக்கமாக தற்காலிகமாக அமைக கப்பட்ட பாதை சேதமடைந்து காணப படுகிறது.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதையில் மழை நீர் செல்வதற் கென வைக்கப்பட்டிருந்த குழாய்க ளுக்கு மேலால் மழைநீர் மேவிப் பாய்கிறது. பாதையின் நடுப்பகுதி மழைநீர் அரிப்புக் காரணமாக முற்றாகச் சேதமடைந்து இரு பகு திகளாகக் காணப்படுகிறது. (21)

# யாழ்.மாநகரசபை நடாத்திய சைவ சமய போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமயக் குழுவினால் வடம ராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களில் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட 5 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

### பாலர் பிரிவு

முதலாம் இடம் - அருளினி தேவபாலன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

இரண்டாம் இடம் - பிருந்தா முருகதாஸ் (நெல்லியடி மெ.மி.த. க.பாடசாலை)

மூன்றாம் இடம் - பாலசுப்பிரம ணியம் குசலன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), பிரவீனா பர லோகராசா (நெல்லியடி மெ.மி. த.க.பாடசாலை).

*விசேட சித்தி பெற்றோர் - 144,*
*திறமைச் சித்தி பெற்றோர்- 300,*
*சாதாரண சித்தி பெற்றோர் - 259,*

### கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - சிவராஜா சிவாங்கர் (பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி)

இரண்டாம் இடம் - ஜதீபா இரத் தினம் (யூனியன் கல்லூரி).

மூன்றாம் இடம் - தனுஜா விஜயராஜன் (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

*விசேட சித்தி பெற்றோர் - 43,*
*திறமைச் சித்தி பெற்றோர் - 78,*
*சாதாரண சித்தி பெற்றோர் - 110,*

### மத்திய பிரிவு

முதலாம் இடம் - அபர்ணா ஜீவரத்தினம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - ஜெசாளினி சிவலோகநாதன் (சாவகச்சேரி இந் துக் கல்லூரி).

மூன்றாம் இடம் - சர்மிகா அரு ணந்திசிவம் (இராமநாதன் கல்லூரி).

*விசேட சித்தி பெற்றோர் - 09,*
*திறமைச் சித்தி பெற்றோர்- 50,*
*சாதாரண சித்தி பெற்றோர் - 80,*

### மேற் பிரிவு

முதலாம் இடம் - பிரசாந் தன பாலசிங்கம் (யூனியன் கல்லூரி).

இரண்டாம் இடம் - மூவர் - கலையரசி கணபதிப்பிள்ளை (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), கல்பனா பாலசுந்தரம் (உடுவில் மகளிர் கல்லூரி), உஷாலினி நவ ரத்தினம் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

*- விசேட சித்தி பெற்றோர் - 11,*
*திறமைச் சித்தி பெற்றோர்- 92,*
*சாதாரண சித்தி பெற்றோர் - 102,*

### அதிமேற் பிரிவு

முதலாம் இடம் - குகப்பிரியா பரராஜசிங்கம் (நயினாதீவு மகாவித் தியாலயம்).

இரண்டாம் இடம் - பாலசாந்தி குணசேகரம் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - பாலகுமாரி குமாரலிங்கம் (இணுவில் இந்துக் கல்லூரி).

*விசேட சித்தி பெற்றோர் - 06*
*திறமைச் சித்தி பெற்றோர்- 59*
*சாதாரண சித்தி பெற்றோர் - 94*

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும், விசேட சித்திகளையும் பெற்றவர்களுக்கு மாத்திரமே பரிசளிப்புத் தினத்தன்று பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். ஏனைய திறமை மற் றும் சாதாரண சித்திகளைப் பெற்ற வர்களுக்கான சான்றிதழ்கள் யாவும் விரைவில் பாடசாலை அதிபர்களி டம் கையளிக்கப்படவிருக்கிறது.

பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளரு மான கலாநிதி க.குணராசா தலை மையில், நாவலர் கலாசார மண்ட பத்தில் இடம்பெறும்.

## நவம்பர் – டிசம்பர் மாத மாதாந்தக் கொடுப்பனவு!

பளை அஞ்சல் அலுவலகத்திலும் அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள உப அஞ்சல் அலுவலகங்களிலும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் இந்த மாதமே வழங்கப்பட்டு வருகின்றன.

சகல பிரதேச செயலகங்களுக்கும் மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அனுப்பிவைத்துள்ள பணிப்புரைக்கமைய இரண்டு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.(21)

## தொடர்ச்சியான மழையினால் பச்சிலைப்பள்ளி கிராமங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கின!

கடந்த சில வாரங்களாகத் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சில கிராமங்கள் மழை வெள்ளத்தால் மூழ்கியுள்ளன.


மாசார், சோரன்பற்று, முகாவில் முருகந்த நகர் கிராமங்களே மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்தும் இன்னும் சில தினங்கள் மழை பெய்தால் மேற் குறிப்பிட்ட கிராமங்களை விட்டு மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்பட லாம்.

வீரக்கனி ஆற்றில் தேங்கி நிற் கும் மழைநீர் தொண்டமானாறு, சுண்டிக்குளம், வழியாகக் கடலுக்கு செல்லாது தேங்கி நின்றால், இந்த ஆற்றின் அண்மையிலுள்ள வடமராட்சி கிழக்கு பச்சிலைப் பள்ளி தென்மராட்சி கிழக்கு பிர தேச கிராமங்களில் குடியிருக்கும் மக்கள் முற்றாக இடம் பெயரும் நிலை ஏற்படலாமென அஞ்சப்படு கிறது. (21)



கனடா திருமறைக் கலாமன்றத்தால் யாழ்ப்பாண பொதுசன நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட நூல்களின் ஒரு தொகுதியை திருமறைக்கலாமன்ற மூத்த உறுப்பினர் கலாபூசணம் ஜீ.பி.பேமினஸ் மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசாவிடம் கையளிப்பதைக் காணலாம். (91)




அண்மையில் யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோகிலா மகேந்திரம் உரையாற்றுவதையும், அருகில் பிரதம விருந்தினர் பேரா சிரியர் சிவானந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினர் சண்முகசுந்தரம் மற்றும் பாடசாலை அதிபர், உப அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர். (207)

## 15 வருடமாக மூடப்பட்டிருக்கும் ஆனையிறவு உப அஞ்சலகத்தை மீளத் திறக்குமாறு கோரிக்கை!

கடந்த பதினைந்து வருடங்க ளாக மூடப்பட்டிருக்கும் ஆனையி றவு உபஅஞ்சல் அலுவலகத்தை மீளத்திறப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் இதுவரை மேற் கொள்ளப்படவில்லை.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரண மாக 1990 ஆம் ஆண்டு இப்பகுதிக் கிராமங்களிலுள்ள மக்கள் முற்றாக இடம்பெயர்ந்தனர். இதன்போது ஆனையிறவு உபஅஞ்சல் அலுவ லகம் மூடப்பட்டு, அங்கு கடமை யாற்றிய அலுவலர்கள் பளை அஞ் சல் அலுவலகத்துடன் இணைக்கப் பட்டு அங்கு கடமையாற்றி வருகின் றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஆனையிறவு உப்பளம் இயங்கு வதுடன் அங்கு பல நூற்றுக்கணக் கான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

இடம்பெயர்ந்திருந்த தட்டுவன் கொட்டி உமையாள்புரம், நாவற் கொட்டியான் கிராம மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் புனர மைப்பு வேலைகளைச் செய்து வருகின்றன. இப்பகுதியில் பாட சாலை, கிராம அலுவலர் அலுவ லகம், பொது ஸ்தாபனங்கள் இயங் குகின்றன. இவர்கள் தமக்குவரும் கடிதங்களை பரந்தன் அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று பெறு கின்றனர்.

ஆகவே, 15 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருக்கும் ஆனை யிறவு உபஅஞ்சல் அலுவல கத்தை மீளத்திறந்து இப்பகுதி மக் களுக்குச் சீரான அஞ்சல் விநியோ கம் நடைபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி உமையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கம், வவு னியா பிரதேச அஞ்சல் அத்தியட் சகர், பளை அஞ்சல் அதிபர் ஆகி யோருக்கு மகஜர் அனுப்பியுள் ளனர். (21)

## சிறிய, நடுத்தர கைத்தொழிலாளருக்கு கடன் வழங்கும் திட்டம் ஆரம்பம்!

### மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்.மக்கள் வங்கி தற்போது மக்கள் துரித கடன் என்னும் திட்டத்தை சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்க ளுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது என மக்கள் வங்கியின் வடபிராந் திய பிரதேச முகாமையாளர் மு. கனகசபாபதி தெரிவித்தார்.

இந்தக் கடன் திட்டத்தின் மூலம் கால்நடை வளர்ப்பு, வணி கம், சில்லறை வியாபாரம், விவ சாயம், நானாவிததொழில் முயற் சிகள், கைத்தொழில், சுயதொழில் முயற்சிகள் என்பவற்றில் ஈடுப டுபவர்களுக்கு வழங்கப்படவுள் ளது.

இந்தக் கடன் திட்டத்துக்கு கடன் எடுப்பவர் மக்கள் வங்கிக் கிளையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், 18 வயது முதல் 55 வயதுக்கு உட்பட் டவராகவும், கடனின் தொகைக்கு ஏற்ப பிணை வைக்கத் தகுதியான வராகவும் இருக்கவேண்டும்.

இதற்கமைய நுண்கடனாக ஒரு லட்சம் ரூபா வரை இரண்டு தனி நபர்களின் உத்தரவாதமும்; ஐந்து லட்சம் வரை கடன் பெறுபவர் சொத்துக்களின் பிணையும், நடுத்த ரக் கடனாக பத்து லட்சம் ரூபா பெறுபவர்கள் வங்கி கோரும் சொத்துக்களின் பிணையும் வழங்க வேண்டுமென அவர் மேலும் தெரி வித்தார்.

## முகமாலை உப அஞ்சலகம் இத்தாவில் இயங்குகிறது

கரவெட்டி அஞ்சல் அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவந்த முகமாலை உப அஞ்சல் அலுவல கம் கடந்த ஆறு மாதங்களாகப் பூட்டப்பட்டு, முகமாலை உப அஞ்சல திபர் அலுவலகம் - பளை அஞ்சல் அலுவலகத்தில் இயங்கி வந்தது.

இந்த உப அஞ்சல் அலுவல கம் முகமாலைக்கு அண்மையில் திறக்கப்பட வேண்டுமென பொது மக்கள், பொதுஸ்தாபனங்கள் கேட் டுக் கொண்டதற்கிணங்க இந்த மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் இத்தாவில் கிராமத்தில் திறக்கப் பட்டு இயங்கி வருகிறது.

இந்தப் பகுதியிலுள்ள மக்கள் நீண்ட தூரம் செல்லாது தமது கிரா மத்திலேயே அஞ்சல் சேவைகள், மற்றும் பொதுசன மாதாந்த உத விப்பணம் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி தற் போது ஏற்பட்டுள்ளது. (21)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Hero Honda Dawn விற்பனைக்குள் ளது. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். 55/1, சீனியர் வீதி, கலட்டி, யாழ்ப்பா ணம். (C/3366)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த
அட்டகாசம்
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சத்ரபதி
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
இந்தியன் புரூஸ்லி தனுஷ், தியா நடித்த
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)

திரைஞ்சனஸ் சங்கானை
ரவி கிருஷ்ணா, சோனியா அகவர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
கேம்பஸ் (ரீல்ஸ்)
விசேட காட்சி: இரவு 9.00 மணிக்கு (பு.நே)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே) (சி-2723)

# சிறுவர் மீதான துஷ்பிரயோகம் கடந்தவருடம் 205 முறைப்பாடுகள்!

தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபைக்குக் கடந்தவருடம் கிடைத்த முறைப்பாடுகளுள் 205 முறைப்பாடுகள் 18 வயதுக்குட்பட்ட சிறார்களைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை தொடர்பானவையாகும்.

இவற்றில் மூன்று சம்பவங்களில் சிறார்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பின்னர், கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இந்த முறைப்பாடுகளில் - 38 முறைப்பாடுகள் தந்தை, சிறிய தகப்பன் மற்றும் நெருங்கிய உறவினர்களால், சிறார்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட, சிறுவர் பாதுகாப்புச் சபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளுள் 3 சிறார்களை விபச்சாரத்துக்கு உட்படுத்தியமை தொடர்பானதாகும்.

சிறுவர் பாதுகாப்புச் சபைக்குக் கடந்தவருடம் கிடைத்த 403 முறைப்பாடுகளுள் 51 முறைப்பாடுகள் உடற்சித்திரவதை மற்றும் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவை எனத் தெரிவித்துள்ள அறிக்கைகள், இவற்றில் 9 முறைப்பாடுகள் பெற்றோருக்கு எதிராகக் கிடைத்துள்ளதாகவும், ஆசிரியர்களுக்கு எதிராக 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அந்த அறிக்கைகள் தெரிவித்தன.

இந்த முறைப்பாடுகளுள் 87 முறைப்பாடுகள் தெற்குப் பிரதேசத்திலும், 77 முறைப்பாடுகள் மேல் மாகாணத்திலும், 57 முறைப்பாடுகள் மத்திய மாகாணத்திலும், 48 முறைப்பாடுகள் வடமத்திய மாகாணத்திலும், 45 முறைப்பாடுகள் ஊவா பிரதேசத்திலும், 35 முறைப்பாடுகள் சப்ரகமுவா மாகாணத்திலும், 10 முறைப்பாடுகள் கிழக்கு மாகாணத்திலும், 8 முறைப்பாடுகள் வடக்கிலும் கிடைத்துள்ளதாக அந்த அறிக்கைகள் மேலும் தெரிவித்தன. (தே)

# வேலைசெய்த வீட்டில் திருடியதாக இலங்கைப் பெண் லண்டனில் கைது!

திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இலங்கைப் பெண் ஒருவர் லண்டன் நீதிமன்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து லண்டனுக்குச் சென்ற இந்தப் பெண், லண்டனிலுள்ள வயோதிபப் பெண் ஒருவரின் வீட்டில் வீட்டுப்பணிப்பெண்ணாகக் கடமையாற்றினார்.

கடந்த ஜூலை மாதம் தனது எஜமானியுடன் பொருட்கள் வாங்குவதற்காக வெளியே சென்ற இந்தப் பெண், மறுநாள் திடீரெனத் தான் பணிப்பெண்ணாகக் கடமையாற்றி வந்த வீட்டைவிட்டு விலகிச் சென்றுள்ளார்.

இதனை அடுத்து குறிப்பிட்ட வீட்டின் எஜமானி தனது அலுமாரியில் இருந்த பணத்தைத் தேடிய பொழுது 1300 பவுண்ஸ் காணாமற் போயிருந்ததுடன், வீட்டிலிருந்த உடுபுடவைகள் உட்பட்ட வேறு சில பொருட்களும் காணாமற் போயிருந்தன.

இவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, குறிப்பிட்ட இலங்கைப் பெண்ணை வலை விரித்துத் தேடி வந்த பொலிஸார் கடந்த வியாழக்கிழமை அவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, சந்தேகநபரை நான்கு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கும்படி லண்டன் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஆபத்தான கட்டத்தை நோக்கி போர்நிறுத்த உடன்பாடு நகர்கிறது!

## கொழும்புப் பத்திரிகைப் பேட்டியில் தமிழ்ச்செல்வன்

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவுக்கும், ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையில் திட்டமிட்டு பிளவை ஏற்படுத்தியதுபோல -

இன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் செயற்பட முனைகின்றார்.


இதனை அடிப்படையாகக் கொண்டுதான் அவர் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்ததாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அரசியற்துறை நடுவகப்பணியகத்தில் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியாவையும், தமிழ் மக்களையும் பிரிப்பதற்கு சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனையே செய்ய முற்படுகின்றார். அவரது இந்திய விஜயம்கூட அதனடிப்படையில்தான் அமைந்துள்ளது என்பதே விடுதலைப் புலிகளின் கருத்தாகும்.

தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில், அதாவது பலாலி விமான நிலையப் புனரமைப்பாகட்டும், திருகோணமலைக்கும், அநுராதபுரத்துக்கும் இடையிலான நெடுஞ்சாலையை அமைக்கும் பணியாகட்டும். இந்தியா தமிழர் தரப்புடன் பேசியே முடிவெடுக்க வேண்டும்.

ஏனெனில் இன விவகாரத்துக்கான தீர்வை நோக்கிய சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அக்கறையும், ஆர்வமும், கரிசனையும் காட்டப்படும் இவ்வேளையில் - பலாலி விமானதளம், திருகோணமலை, அனுராதபுரம் நெடுஞ்சாலை போன்ற விடயங்களில் இந்தியா, இலங்கை அரசுடன் இணைந்து மேற்கொள்ளும் தீர்மானங்கள் சமாதான முன்னெடுப்புகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் தமிழர் விரோதப் போக்கினை அங்கீகரித்து உற்சாகப்படுத்துவதாக அமைந்துவிடும்.



போர் நிறுத்த உடன்பாடு ஆபத்தான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. எம்மை வந்து சந்தித்த தமிழ்மக்கள் 'போரும் இல்லை, சமாதானமும் இல்லை, மக்களுக்கு நிவாரணமும் இல்லை' என்ற நிலையில் தொடர்ந்தும் துன்பப்பட முடியாது. எமக்கு ஒரு முடிவு தாருங்கள், என்று கேட்கின்றனர். எனவே, மக்கள் பொறுமை இழந்து செல்கின்றனர். இரண்டரை வருடங்களுக்கு மேல் பொறுமை காத்த மக்கள் தொடர்ந்தும் பொறுமை காப்பர் என்று கூறமுடியாது. எதிர்பார்க்கவும் முடியாது.

தென்னிலங்கை அரசியலில் ஜனாதிபதிக்கு எதிரான நிலைப்பாட்டிலும், எதிர்க் கட்சித் தலைவர் ரணிலுக்கு சாதகமான போக்கிலும் புலிகள் இருப்பதாகத் தென்னிலங்கையில் கருத்து நிலவுகின்றது.

புலிகள் தென்னிலங்கை அரசியலில் சாய்வு அரசியல் போக்கினைக் கடைப்பிடிக்க வில்லை. ரணில் விக்கிரமசிங்க காலத்திலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டன. அதே நிலைப்பாட்டில்தான் புலிகள் இன்றும் உள்ளனர் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

## அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு

# பிரத்தியேக வாகனங்கள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பிரத்தியேக வாகனங்களை வழங்குவதை அமைச்சரவை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

தற்பொழுது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதால், நடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான வாகனங்களைத் தற்காலிகமாகப் பெற்றுக்கொடுப்பதை இடைநிறுத்தியுள்ளதாக அமைச்சரவை அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த வாகனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக 56 கோடி ரூபாவை நாடாளுமன்ற விவகார அமைச்சு ஒதுக்கியிருந்தது.

ஆனால், வாகனங்களைக் கொளவனவு செய்வதற்கு அனுமதி வழங்க ஜனாதிபதி மறுப்புத் தெரிவித்ததை அடுத்து அமைச்சரவைப் பத்திரம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான வாகனங்கள் பெற்றுக்கொடுப்பதை அடுத்துவரும் முதல் ஆறுமாத மதிப்பீட்டின் மூலம் வழங்குவதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.(தே)

# அரச ஊழியர்கள் அனைவரும் ஜனவரியில் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

நாட்டில் இருந்து லஞ்சம் மற்றும் ஊழல்களை முற்றாக நிறுத்தும் நோக்கிலும், அரச சேவையின் அபிமானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலும் எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் அனைத்து அரச ஊழியர்களும் மீளவும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவேண்டும் என, லஞ்ச ஊழல் முறைப்பாட்டு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் பியசேனா ரணசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரிமாதம் மூன்றாம் திகதி அரச அலுவலகங்கள் மீள ஆரம்பமாகும்போது, கைச்சாத்திடப்படவுள்ள சத்தியப்பிரமாணப் படிவத்தில் "நான் பொதுமக்களின் ஊழியன் ஆவேன். பொதுமக்களிடமிருந்து சம்பளம் பெறுபவன் ஆகையால், நான் மிக உயர்ந்த சேவையை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளேன். அனைத்து வேளைகளிலும் அரச சொத்துக்களை நன்கு பாதுகாப்பதற்கும், அவற்றைச் சட்டவிரோத முறையில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கும், நடவடிக்கை எடுப்பேன். அதன்மூலம் பொதுமக்கள் மற்றும் அரச சொத்துக்களைச் சிக்கனத்தோடு பாவிப்பதற்கும், எனது எதிர்காலச் சந்ததிக்கு வழங்குவதற்காக நன்கு முயற்சி எடுப்பேன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தே)

# விரைவில் ஆட்சி பிடிப்போம்; ஜே.வி.பி. கூட்டத்தில் சூளுரை!



விரைவில் தமது கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்றும் ஜே.வி,பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் றோகண விஜேயவீர கொல்லப்பட்டு, 15 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கில் ஜே.வி.பி.யினரால் பாரிய அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு ரில்வின் சில்வா தொடர்ந்து பேசுகையில்-

ஐக்கிய தேசியக் கட்சி தலைவரான ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் இணைந்து இந்த நாட்டைப் பிரிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

தமிழருக்கு சுயாட்சி கொடுக்கப்படுவதை ஜே.வி.பி. ஒருபோது அனுமதிக்காது. எமது கட்சி வெற்றிப்பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் ஆதரவுடன் எமது கட்சி விரைவிலே ஆட்சியைப் பிடிக்கும்.

றோகண விஜேயவீரவினால் ஆரம்பிக்கப்பட்ட எமது கட்சியை எவராலுமே அழிக்க முடியாது. 1994 ஆம் ஆண்டு ஜே.வி.பிக்கு நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனம் மட்டுமே இருந்தது. ஆனால் 2004 ஆம ஆண்டில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்றிருக்கின்றோம்.

எமது கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து ஜே.வி.பி. உறுப்பினர்களும் அயராது உழைக்க வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# வறுமை, பொருளாதாரப் பின்னடைவுக்கு நிரந்தர சமாதானமின்மையே காரணம்!

## மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு

நாட்டில் வறுமையும், பொருளாதாரப் பின்னடைவுகளும் ஏற்படுவதற்கு நிரந்தரமான சமாதானம் இல்லாமையே முக்கிய காரணம் என்று, மல்வத்தை பீடாதிபதி சங்கைக்குரிய திப்பொட்டுவாகே சிறிசித் தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

கண்டியில் மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்த ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசிடமே மல்வத்த பீடாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் இந்த நிலைமை காரணமாகப் பெறுமதிவாய்ந்த அபிவிருத்தி உதவிகள் நாட்டுக்குக் கிடைக்காமல் போயிருக்கின்றன.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இரண்டு பிரதான கட்சிகளினதும் தலைவர்கள் ஒன்றுசேர வேண்டும். இந்தத் தலைவர்கள் எடுக்கின்ற எந்தவொரு தீர்மானமும் சகல சமூகங்களுக்கும் ஏற்புடையதாய் இருக்கவேண்டும்.

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே இப்பொழுது நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகள் சரியான வழியில் திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகும் என்று மல்வத்த பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்துத்தெரிவித்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் -

ரோக்கியோ, ஒஸ்லோ பிரகடனங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஐக்கிய தேசியக்கட்சி பூரணமாக ஆதரவு தெரிவிக்கும்.

எமது கட்சி ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை ஊக்குவிப்பதற்கு எப்பொழுதும் ஆதரவு தெரிவித்துவந்தது.

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் ஏற்பட இருக்கும் உடன்பாட்டில்தான் நாங்கள் தேசிய ஆலோசனை சபையில் கலந்துகொள்வது தங்கியிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

## அல்கெய்டாவின் விஷமத்தனத்தால்

# தமிழரின் கணினி நிலையத்திற்கு பிரிட்டிஷ் உளவுத்துறை சீல் வைப்பு!

(கொழும்பு)

லண்டனில் அல்கெய்டா அமைப்பினர் மேற்கொண்ட விஷமத்தனமான நடவடிக்கையால் தமிழர் ஒருவரின் கணினி விற்பனை நிலையம் மூடப்பட்டது.

யாழ்ப்பாணம் - வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர் ஒருவரின் கணினி விற்பனை நிலையத்தில் இன்ரநெட் சேவை நடத்தப்பட்டு வந்தது.

இந்தக்கணினி நிலையத்தில் இணைய சேவையைப் பயன்படுத்திய அல்கெய்டா அமைப்பின் உறுப்பினரெனச் சந்தேகிக்கப்படும் ஒருவர், அல்கெய்டா அமைப்பின் பிரதிநிதியாக மின்அஞ்சல் ஊடாகப் பலவிடயங்களைப் பரிமாறியுள்ளதுடன், பலருக்கு மிரட்டல்களும் விடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதனை நீண்ட நாட்களாகப் பிரித்தானிய உளவுப்பிரிவான எம் 16 திடீரென்று கடையைச் சுற்றி வளைத்து, அனைத்துக் கணினிகளையும் எடுத்துச் சென்றுள்ளதுடன், தற்காலிகமாகத் தமிழரின் கடைக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தநிறுவனத்தை நடத்தி வந்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவரின் நீண்ட கால நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈடன் கார்டன் மைதானத்தில் அணித் தலைவர்கள் கௌரவிப்பு



கபில்தேவ்


சச்சின்


ராவிட்


கங்கூலி


கிளைவ் லொயிட்


இம்ரான் கான்

(கொல்கத்தா)

இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழாவை முன்னிட்டு, கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இந்திய, பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர்கள் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தியாவின் இனிங்ஸ் முடிவடைந்ததும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் - அனைத்து முன்னாள் அணித்தலைவர்களையும் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் தத் கௌரவித்தார்.

அத்துடன் தற்போதைய அணியில் விளையாடிவரும் முன்னாள் இந்நாள் கப்டன்களும் கௌரவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைச் சின்னம் பொறிக்கப்பட்ட - வெள்ளித் தட்டு, ரை, கையால் வேயப்பட்ட உயர்தர காஷ்மீர் சால்வை ஆகியவற்றை வழங்கிப் பாராட்டினார் சுனில் தத்.

இந்தியாஸ் அகமது, ஹனிப் முகமது, நாரி கான்டிராக்டர், சந்து போர்டே, இன்டிகாப் அலம், எஸ். வெங்கட்ராகவன், பிஷன்சிங் பேடி, குண்டப்பா விஸ்வநாத், அஜித் வடேகர், ஜாகீர் அப்பாஸ், இம்ரான் கான், திலீப் வெங்சர்க்கார், கபில் தேவ், ரமீஸ் ராஜா, ரவி சாஸ்திரி, வக்கார் யுனிஸ் ஆகியோர் பாராட்டுப் பெற்றனர்.

கவாஸ்கர், அஸாருதீன் ஆகிய முன்னாள் கப்டன்கள் கலந்து கொள்ளவில்லை.

துபாயில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி கூட்டத்தில் பங்கேற்கச் சென்றுள்ளதால் கவாஸ்கர் பங்கேற்கவில்லை. அதே சமயம் அழைப்பு விடுக்காததால் அஸாருதீன் கலந்து கொள்ளவில்லை.

இன்சமாம் உல்ஹக், சச்சின் டெண்டுல்கர், கங்கூலி, ராவிட் மற்றும் போட்டி நடுவரும் முன்னாள் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கப்டனுமான கிளைவ் லொயிட் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழாவைக் கௌரவிக்கும் விதமாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார் கான் வழங்கிய கிண்ணத்தை, சுனில் தத் பெற்றுக் கொண்டார்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு!

(கொல்கத்தா)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்திய - தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகள் இடையே 2 டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் நடைபெறவுள்ளது.

இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி கான்பூரில் வருகிற 20 ஆம் திகதியும், 2 ஆவது டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் வருகிற 28 ஆம் திகதியும் தொடங்குகிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

காயம் காரணமாக அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான கடைசி 2 டெஸ்ட் போட்டியில் ஆடாத அணித்தலைவர் கங்கூலி, வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் ஆகியோர் மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

தீரஜ் யாதவ், எஸ்.எஸ்.போல் ஆகியோர் மும்பை டெஸ்டுக்கான இந்திய அணியில் இடம்பிடித்து இருந்தும், ஆடும் லெவனில் இடம் கிடைக்கவில்லை.

அவர்கள் இருவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். மும்பை டெஸ்டில் யுவராஜ்சிங், பட்டேலுக்குப் பதிலாக அணியில் சேர்க்கப்பட்ட கௌதம் காம்பிர், தினேஷ் கார்த்திக் தொடர்ந்து அணியில் நீடிக்கிறார்கள். சுழற்பந்து வீச்சாளர் முரளி கார்த்திக் அணியில் இடம் பிடித்துள்ளார்.

இந்திய அணி வீரர்கள் வருமாறு -

கங்கூலி (அணித் தலைவர்), கௌதம் காம்பிர், ஷேவாக், ராகுல் ராவிட், வி.வி.எஸ்.லக்ஸ்மன், சச்சின் டெண்டுல்கர், கைவ், தினேஷ் கார்த்திக், அனில் கும்ளே, ஹர்பஜன்சிங், முரளி கார்த்திக், சகீர் கான், இர்பான் பதான், ஆசிஷ் நெஹ்ரா.

## தலைமை மாற்றம் குறித்த

# மார்க் வோவின் கருத்து குறித்து கங்கூலி கவலைப்படவில்லையாம்!



இந்திய அணித் தலைமையில் மாற்றம் தேவை என்று அவுஸ்ரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் மார்க் வோ கூறிய கருத்தினால் கவலைப்படவில்லை என்று இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் சௌரவ் கங்கூலி கூறினார்.

அவரவர் கருத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு முன்னாள் வீரர்களுக்கு உரிமை உண்டு. அதற்காக அவர்களுக்கு நான் பதிலளிக்கவேண்டிய அவசியம் இல்லை.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் உட்பட அனைவரும் மோசமாக ஆடியதை ஒப்புக்கொள்கிறேன்.

நம்முடைய வீரர்கள் அதிக ஓட்டங்களை எடுக்காதது ஏமாற்றத்தை அளித்தது. ஆனால் மும்பையில் நடந்த கடைசிப் போட்டியில் ஒருசில வீரர்கள் நல்ல திறமையுடன் விளையாடினர். எஞ்சிய வீரர்களும் திறமையாக ஆடுவதற்கு நல்ல பயிற்சியை மேற்கொள்வர் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

நாங்கள் திட்டமிட்டுத்தான் விளையாடினோம். ஆனால் அது அவ்வளவாக எடுபடவில்லை. இது கிரிக்கெட் ஆட்டத்தில் நிகழக்கூடியதுதான்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஆடிய இந்திய அணியில் வீரர்களைத் தேர்வு செய்ததில் எந்த வித பிரச்சினையும் இல்லை. தேர்வுக் குழுவில் திறமையான முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் இருந்தனர். அணித் தேர்வில் எவ்விதக் குறைபாடும் கிடையாது என்றார் கங்கூலி.

# சச்சினை மடக்கும் வித்தையுடன் இந்தியாவுக்கு வந்திருக்கின்றோம்

## தென்னாபிரிக்கப் பயிற்சியாளர்

(ஜெய்ப்பூர்)

சீமெந்துத் தரையால் ஆன ஆடுகளமானாலும் சரி, மணலால் ஆன ஆடுகளமானாலும் சரி எதையும் எதிர்கொள்ளத் தயார் என, தென்னாபிரிக்க அணிப் பயிற்சியாளர் ரே ஜென்னிங்ஸ் சவால் விடுத்துள்ளார்.

எரிக் சைமன்ஸிடம் இருந்து, தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக கடந்தமாதம் பொறுப்பேற்றுக் கொண்டார் ஜென்னிங்ஸ்.

50 வயதாகும் இவர் முன்னாள் தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரருமாவார்.

ஜெய்ப்பூரில் கடந்த சனிக்கிழமை அவர் கூறியுள்ளதாவது -

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டியில் இந்தியா அபார வெற்றிபெற்றது. இது குறித்து பல்வேறு சர்ச்சைகள் நிலவிவருகின்றன. ஆனால் அம்மாதிரியான தரக்குறைவான ஆடுகளங்களிலும் இந்தியாவை நாங்கள் எதிர்கொள்ளமுடியும்.

அத்துடன், தங்களது சொந்த மண்ணில்கூட சரியாக விளையாட முடியாத மனப்பான்மையை இந்திய வீரர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

விளையாடப் போகும் ஆடுகளம் கட்டாந்தரையாகவோ அல்லது மணலாகவோ இருந்தாலும் அந்தத் தடையைத் தாண்டி வெற்றி காண எங்களது வீரர்கள் தயாராக உள்ளனர்.

துடுப்பாட்டத்தின்போது இரு அணியினருக்கும் நிர்ப்பந்தம் இருக்கும். யார் அதிகமான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறார்கள் என்பது தான் முக்கியம்.

எதிரணியினர் எவ்வளவு மோசமாக ஆடி விக்கெட்டைப் பெற்றாலும் கவலையில்லை. அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

ரசிகர்கள் அதிகம் எதிர்பார்க்கும் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆட்டத்தை மங்கச் செய்யும் விதமான திட்டத்தையும் கொண்டுள்ளோம். சச்சினுக்கு எதிராக எப்படி ஆடுவது என்ற வித்தையுடன் வந்துள்ளோம்.

ஆனால், அதை இப்போது கூற முடியாது. பந்து வீசத்தொடங்கும் போது அவருக்கான நிர்ப்பந்தம் தெரியவரும். அதேசமயம் நாங்கள் துடுப்பாட்டம் செய்யும்போது அவர்களால் எங்களுக்கு சில நிர்ப்பந்தமும் இருக்கக்கூடும் என்றார் ஜென்னிங்ஸ்.

## சஞ்சீவன் நினைவு கிரிக்கெட்

# மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் வெற்றி!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ் இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் ஞாபகார்த்தமாக தமிழ் மாணவர் ஒன்றியம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின், மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி வெற்றிபெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் கடந்த முதலாம் திகதி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானங்களில் இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது.


இந்த ஆட்டங்களின் மூலம் இறுதிப் போட்டிக்கு யாழ். இந்துக் கல்லூரி அணியும், யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அணியும் தெரிவு செய்யப்பட்டன.

மூன்றாமிடத்துக்கான போட்டிக்கு நயினாதீவு மகா வித்தியாலயமும், உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியும் தெரிவாகின.

நேற்றுக்காலை 10 மணியளவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோதே உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது.

## லொஸ் ஏஞ்சல்ஸ் ரெனிஸ்

# ஷரபோவா, மிஸ்கினா வெற்றி பெற்றனர்!



(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவின் சர்வதேச ரெனிஸ் தொடரில் - மரியா ஷரபோவா, அனஸ்டசியா மிஸ்கினா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ. ரெனிஸ் சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றுவருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த லீக் சுற்றுப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, சகநாட்டு வீராங்கனையான வெரா ஜூவோனரிவாவுடன் மோதினார்.

முதல் செட்டில் எளிதில் தோல்வியை ஒப்புக் கொண்ட ஜூவோனரிவா, அடுத்த செட்டில் கடும் நெருக்கடி அளித்தார்.

ஆனாலும் இறுதியில் ஷரபோவா 6:4, 7:5 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். முதல் லீக் போட்டியில் ஷரபோவா, ஸ்வெட்லானா குஸ்னட்சோவாவை (ரஷ்யா) வீழ்த்தினார்.

மற்றொரு போட்டியில், உலகின் முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் லிண்ட்சே டேவன்போர்ட், ரஷ்யாவின் அனஸ்டாசியா மிஸ்கினாவை எதிர்த்து விளையாடினார். இந்தப் போட்டியில் டேவன்போர்ட் 6:7, 4:6 என்ற நேர் செட்களில் தோல்வி அடைந்தார்.

முதல் லீக் போட்டியில் மிஸ்கினா, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸிடம் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கை வளங்களைப் பாதுகாக்க யாழ்.அரச அதிபர் நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாக்க திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததனால் யாழ்.குடாநாட்டு நிலப்பரப்பு கடலரிப்புக்கு உள்ளாகிக் குறைவடைந்து வருகின்றது.

குறிப்பாக வடமராட்சி, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களில் கரையோரப் பிரதேசங்களிலுள்ள பனை, தென்னை, கண்டல் தாவரங்கள் என்பன சட்டவிரோதமாகத் தறிக்கப்படுவதனாலும், சட்டவிரோத மணல் அகழ்வினாலும் பாதிப்படைந்துவருவதைப் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியதையடுத்து அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைப் பாதுகாக்க அதிகாரிகளுடன் கூடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடலரிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் மணல் அகழ்வோர் மீதும், கரையோரப் பிரதேசங்களில் உள்ள வளங்களைப் பாதிப்படையச் செய்யும் விதத்தில் சட்டவிரோதமாக மரந்தறிப்போர் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது. (17)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கு அடுத்தவருடம் நிரந்தரச் சம்பளம்!

(கொழும்பு)

அறநெறிப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அடுத்த வருடம் முதல் நிரந்தர சம்பளத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.தெய்வநாயகம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டில் தற்போது சுமார் 1250 அறநெறிப் பாடசாலைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 3 லட்சம் மாணவர்கள் கல்வி பயிற்றுவருகின்றனர். (122)

# தேசியத் தலைவரின் பிறந்ததினத்தில் குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகள்!

தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு 300 பேர் இரத்த தானம் செய்யும் நிகழ்வை யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது. தலைவரின் பிறந்தநாளான எதிர்வரும் 26 ஆம் திகதி தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலகத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

அதேவேளை, தேசியத்தலைவரை வாழ்த்தி கேடயம் ஒன்றை தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பிவைக்க யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை நடவடிக்கை எடுத்துவருகிறது.

அத்துடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 குடும்பங்களுக்கு சமூக நலத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படும். இதேபோன்று பல்வேறு நலன்சார் திட்டங்களை நடைமுறைப்படுத்த தேசிய எழுச்சிப்பேரவையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்தநாளன்று ஒவ்வொரு பிரதேசத்திலும் பொங்கல் பொங்கியும், இனிப்புப்பண்டங்கள் வழங்கியும் மகிழ்ச்சியுடன் முன்னெடுக்கவும், ஒவ்வொரு ஆலயங்களிலும் தலைவர் நீடூழி வாழ பிரார்த்தனை செய்தும் பூசை வழிபாடுகளை நடாத்த ஆலய பரிபாலன சபையினர், தேசிய எழுச்சிப் பேரவையின் உதவியுடன் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

# மாவீரர் நாள் நிகழ்வுகளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க தேசிய எழுச்சிப் பேரவை ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

தாயக மண்மீட்புப் போரில் தமது இன்னுயிரை அர்ப்பணித்து எம் நெஞ்சில் நிறைந்துள்ள புனிதர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் அண்மிக்கிறது. எமது மக்களை உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு யாழ்ப்பாண மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாவீரர் நாள் வேலைத் திட்டங்களை பொது அமைப்புக்களுடன் இணைந்து தேசிய எழுச்சிப் பேரவையினர் முன்னெடுக்கவுள்ளனர். மாவீரர் நாளை முன்னிட்டு யாழ். மாவட்டப் பிரதேசங்களில் சிவப்பு - மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கவும், முக்கிய இடங்களில் வளைவுகள் கட்டியும், நினைவுப் பந்தல்கள் அமைத்தும், மாவீரர் திருவுருவப் படங்களை வைத்து மலர் வணக்கம் செலுத்தவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

அதேவேளை - மாவீரர் நாளை முன்னிட்டு இரத்ததானம், சிரமதானம், மக்கள் நலன்சார் திட்டங்கள், போன்றவற்றைச் சிறப்பாக முன்னெடுக்கவும், அத்துடன் - மாவீரர்களது பெற்றோரைச் சிறந்த முறையில் கௌரவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லம் செல்வதற்கும் தேசிய எழுச்சிப் போவையினர் விரிவான எர்பாமென நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை - மாவீரர் நாளன்று - முதல் மாவீரர் சங்கர் வீரச்சாவடைந்த நேரமான மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்களில் மணி ஒலியெழுப்பிச் சுடரேற்றவும், அனைத்து வீடுகள், அலுவலகங்களில் சுடரேற்றவும் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமெனவும், இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி விடுதலை ஒளி பிரகாசிக்கச் செய்ய அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தேசிய எமச்சிப் போவை வேண்டுகோள்

# வலி.தெற்கு கலாசார போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

வலி.தெற்கு பிரதேச சபையால் நடாத்தப்படவுள்ள 2004 ஆம் ஆண்டுக்கான கலை, இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. திறந்த போட்டிகளாக - சிறுகதை, கவிதை, நாடக எழுத்துரு, சித்திரம், சங்கீதம், நடனம், நாட்டார் பாடல், கீழைத்தேய இசைக்கருவிகள் மீட்டல் ஆகியன நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும். இடம்பெயர்ந்தோ அல்லது நிரந்தரமாகவோ இப்பிரதேசத்தில் வாழ்பவர்கள் தாம் குறிப்பிட்ட பகுதியில் வசிக்கின்றமைக்கான அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். சிறுகதைப் போட்டியில் பங்குபற்றுவோர் கதைக்கான தலைப்பு, பேசுபொருள் என்பவற்றைத் தாமே தீர்மானித்துக்கொள்வதோடு, சொற்கள் 700 இற்கும் 800 இற்கும் இடைப்பட்டவையாக அமைதல் வேண்டும்.

கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக்கவிதையாகவோ அமையலாம். கவிதைகள் 14 முதல் 24 வரையான வரிகளை உடையனவாக அமைதல்வேண்டும். நாடகம், எழுத்துரு, ஒரங்க நாடகங்களாக அமைவதோடு 15 நிமிடங்களுக்கு உட்பட்டவையாக இருக்கவேண்டும். சித்திரப் போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் "விதியா விதியிதுவோ" என்கின்ற வாசகம் தருகின்ற கற்பனைப் புலப்பாடாக அமைதல்வேண்டும். சங்கீதம் தனிப் போட்டிகளில் பங்குபற்றுவோர் கீர்த்தனைகள் இயற்றிப் பாடுதல் வேண்டும். கீர்த்தனைகள் வலி.தெற்குப் பிரதேசத்துடன் தொடர்புடைய இயற்கை, அபிவிருத்தி, சமய, கலாசாரங்களோடு தொடர்புபட்டவையாக அமைதல்வேண்டும்.

தனி நடனப்போட்டிகளில் பங்குபற்றுவோர் நடுவர் குழுவால் வழங்கப்படும் விடயத்தில் 5 நிமிடம் தயார்ப்படுத்தலின் பின்னர் நிகழ்த்துதல்வேண்டும். நாட்டார் பாடல்கள் தனி, குழுப்போட்டிகளாக இடம் பெறும். எனினும், நிகழ்ச்சிகள் தனித்தனியாக மதிப்பிடப்படும். பாடல்கள் 5-7 நிமிடங்கள் வரையானதாக அமையும். இசைக்கருவிகள் இசைககும் போட்டிகளில் நாதஸ்வரம், தவில், மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல் என்பவற்றை மீட்டுவதற்கான போட்டிகள் தனித்தனியாக இடம்பெறும்.

போட்டியில் பங்குபற்றுவோர் விண்ணப்பப்படிவம் மற்றும் போட்டி விதிமுறைகள் அடங்கிய கையேடு ஆகியவற்றை உடுவில் பிரதேச செயலகத்தில் அல்லது தத்தமது கிராம அலுவலர்களிடமோ பெற்று, அடுத்தமாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் உடுவில் பிரதேச செயலகத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திறந்த பல்கலைக்கழக விண்ணப்பங்கள்

திறந்த பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாக முதுமாணி மற்றும் பொதுநிர்வாக முதுமாணி ஆகிய கற்கை நெறிகளில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள், திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் விநியோகிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவுக் கடைகளைப் புனரமைக்குமாறு மட்டுவில் பகுதி மக்கள் கோரிக்கை!

தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தில் போரால் சேதமடைந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா கிளை, மட்டுவில் வடக்கு மோகனதாஸ் கிளை ஆகியனவே இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளது. இந்தக் கிளைகளுக்கெனச் சொந்தக் காணியும் கட்டடங்களும் இருக்கின்றபோதும், தற்போது வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் கட்டடங்களிலேயே இந்தக் கிளைகள் இயங்கிவருகின்றன. (122)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : சு.சரணியா
முகவரி : மன்னார்

நான்காவது அகவையில்



பெயர் : ம.மதுமிதா
முகவரி : கரவெட்டி

ஒன்பதாவது அகவையில்



பெயர் : சி.நதுர்ஜா
முகவரி : கரவெட்டி

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :--------------------

முகவரி :--------------------

பிறந்த ஆண்டு:--------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்

## உயர்தொழில்நுட்ப நிறுவன பரீட்சை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்ப நிறுவன 2 ஆம் அரையாண்டுப் பரீட்சைகள் யாவும் நாடெங்கிலும் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

அத்துடன் அடுத்த வருடத்துக்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும், இது தொடர்பான மேலதிக விபரங்களை திருநெல்வேலியில் உள்ள யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (99)

## வலி.மேற்கில் நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

தற்போது மழைகாலமாகையால் வலி.மேற்குப் பிரதேசத்தில் பல பிரதேசங்களில் நுளம்புப் பெருக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகிறது.

வலி.மேற்குப் பிரதேசத்திச் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால், மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவும் ஆபத்தும இந்தப் பிரதேசத்தில் காணப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு வலிமேற்குப் பிரதேச சபை - மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்கும்படி இப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (207)



குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் தாழ்வான பகுதிகளில் தங்கியுள்ள மக்களின் குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதைப் பட த்தில் காணலாம்.



# அம்மா நான் விளையாட....?

- சி.கதிர்காமநாதன் -



சிறுகதை

ஒருமுறை துள்ளியது. மறுமுறை துள்ளியது. கட்டியிருந்த கயிறு 'அறுவதாகத்' தெரியவில்லை. கயிறு மெல்லியதாக இருந்தாலும் 'பலமாக' இருந்தது. அதனால் ஒவ்வொரு முறையும் துள்ளி விழும்போது கன்றுக்குட்டிக்கு இடது முன்னங்கால் 'பயங்கரமாய்' வலித்தது.

உனக்கேன் வீண்வேலை பேசாமல் இரு - என மனது அழுதபடி ஓலமிட்டது. கடைசியில் அது களைப்படைந்து கீழே தரையில் கால்களைப் பரப்பி உட்கார்ந்து கொண்டது. கூடஇருந்த நண்பர்கள், உறவினர்கள் வெளியே மேய்ச்சலுக்குப் போய்விட்டார்கள். அவர்கள் கூட்டமாகப் போனதைப் பார்த்த கன்றுக்குட்டிக்கு என்னமோ செய்தது.

“அட என்னமாய் உல்லாசமாய்ப் போகிறார்கள்” காலையில் வீட்டு எஜமான் வந்து மேய்ச்சலுக்கு மாடுகளை அவிழ்த்துவிட்டுத் தொழுவத்தைக் கூட்டிப் பெருக்கிப் போய்விடுவான்.

அடுத்த தொழுவம் வெறிச்சோடிப் போய்விடும். கன்றுக்குட்டிக்கு வாழ்க்கை வெறுத்ததுபோல் ஆகிவிட்டது.

என்ன இது? இவர்கள் மனிதர்களா? எனக்கேன் இப்படிக் கட்டுப்போட்டு வைத்திருக்கிறான். நான் உல்லாசமாய் நாலு இடம் போய்வர உரிமை இல்லையா?

பாவம் காலையிலும், மாலையிலும் பால்குடிக்கும் நேரம் மட்டும்தான் அதற்குச் சுதந்திரம் கிடைக்கிறது. அதோடு அதன் சுதந்திரம் பறிபோய்விடும்.

பால் குடிக்கும் நேரம் கன்றுக்குட்டிக்கு இருக்கும் மனநிலையை வர்ணிக்க முடியாது. தாயின் பாசமான அழைப்பு இரத்தத்தில் புகுந்து அதனிடம் விரைந்தோடச் செய்யும்.

தாயின் பாலை முட்டி, முட்டி மோதிக் குடிக்கும் சுகமே அலாதிதான். பால் வற்றிப்போக மனம் அதற்குச் சுருங்கிப் போய்விடும்.

“கடவுளே, இன்னும் கொஞ்சம் பாலைக்குடேன். என இறைவனிடம் கெஞ்சும். பால் குடித்த உசாரில்” அது தாயிடம் கேள்விகள் கேட்கும்.

ஏனம்மா, என்னைக் கட்டிப்போட்டு வைத்திருக்கிறார்கள். நானும் ஓடியாடி விளையாடக்கூடாதா? மனிதர்கள் என்ன மாதிரி இருக்கிறார்கள்? அம்மா எனக்கு இப்படி இருக்கப் பிடிக்கவில்லை. சீக்கிரம் நான் வெளியேபோக உதவிசெய்.

தாயிடம் கன்றுக்குட்டி மன்றாடியது. கெஞ்சியது, தாய்க்கு மிகவும் கஷ்ரமாக இருந்தது. தனது பிள்ளையின் பரிதவிப்புத் தாய்க்குப் புரிந்தது. எப்படி அதற்குப் புரிய வைப்பது? பாவம் சின்னப் பிள்ளை, விளையாட்டுப்பிள்ளை. அதன் வயதுக்கு விளையாட வேண்டியதுதான். கவலையா? துக்கமா? அதன் உலகம் அப்படியானது.

நமது உலகம் எப்படி இருக்கிறது? பெரிய இனம், சின்ன, சிறிய இனத்தை அடக்கி வைக்க நினைக்கிறது. யுத்தங்கள் உயிர் இழப்புக்கள்.

கன்றுக்குட்டிக்கு இது தெரியுமா? எப்படித் தெரியும்? இப்போதுதானே அது உலகத்தைப் பார்க்கிறது. உலகத்தில் ஆசையும் வைக்கிறது. பொழுதைப் போக்க நினைக்கிறது.

பாவம், அது சிறுபிள்ளை. தாய் கன்றுக்குட்டியை வாஞ்சையுடன் பார்த்தது. அதற்கு என்ன பதில் சொல்லி மனத்தைத் திருப்புவது? நான் சொல்லும் காரணங்களை அது ஏற்றுக்கொள்ளுமா? புரிந்து செயற்படுமா? அல்லது கைகொட்டிச் சிரித்து எள்ளி நகையாடுமா?

'இளம் 'கன்று பயமறியாது' என்று சொல்லுவார்கள். என் பிள்ளைக்கும் இது பொருந்தும்.

எப்படியும் நான் உலகத்தைப் பற்றிச் சொல்லியே ஆகவேண்டும். உண்மையை மறைக்கக்கூடாது.

கன்றுக்குட்டியைத் தாய் அருகே அழைத்தது. நாவினால் தலை, கன்னம், பிடரியென வருடியது. ஆசை ஆசையாய் வருடியது. கன்றுக்குட்டி தன்னை மறந்து நின்றது. இருந்தும் அதன் நினைவே எப்போது என் கட்டு “அவிழும்” என்ற ஏக்கத்தில் இருந்தது. மனது சும்மா இருக்கவில்லை. தனது விடுதலை பற்றித் தாயிடம் மீண்டும் கேட்கத் தூண்டியது.

“அம்மா! எனக்கு எப்போது விடுதலை கிடைக்கும்? பதில் சொல்லம்மா.

அவசரப்படாதே, மகனே! பொறுமையாய் இரு. இந்த உலகத்தைப் பற்றித் தவறாகப் புரிந்து அதீத கற்பனை செய்து வைத்திருக்கிறாய். நீ நினைக்கிறமாதிரி இந்த உலகம் ஓடியாடி, விளையாடித் திரிகிற உலகமல்ல. பெரிய இனம், சிறிய இனங்களை வாழ விட்டுக்கொடுக்காது. குண்டுகள் வெடிக்கும், கட்டடங்கள் தரைமட்டமாகும். மனித உடல்கள் சிதறிப்போகும். மனிதர்கள் இருப்பிடங்களைவிட்டு அகதிகளாக ஓடுவார்கள். நோயும், பட்டினியும் பிடித்து அழிவார்கள்.

தாய், கன்றுக்குட்டியைப் பார்த்துக் கூறியது. கன்றுக்குட்டிக்கு, சந்தேகம் வந்தது.

“அம்மா! என்ன சொல்கிறாள்? சண்டையாம், குண்டு வெடிப்பாம்” மனிதர்கள் அழிகிறார்களாம், உலகம் அபாயகரமானதா?

கன்றுக்குட்டிக்கு ஒன்றும் புரியவில்லை. அம்மா, எனக்குப் பொய் சொல்கிறாளா? அதனால் அம்மாக்கு என்ன நன்மை? ஆனால், அம்மா ஏன் என்னை ஒரேயடியாகப் பயமுறுத்துகின்றாள்.

அது யோசித்து, யோசித்துக் குழம்பியது. “அம்மாவின் கதையைக் கேட்டால், எனக்கு இப்போது விடுதலை கிடையாதுபோல் தெரிகிறது?

என்ன செய்வது?

கன்றுக்குட்டிக்குப் பகலில், இரவில் இடையிடையே கேட்கும் அந்தப் “பயங்கரமான” சத்தங்கள் நினைவுக்கு வந்தது. உலகமே அதிர்வதுபோன்ற உணர்வு. வானில்” இயந்திரப் பறவைகள் சுழன்று கரணம் அடிக்கும். நெஞ்சு படபடக்கும். காதுகள் அடைத்துப் போகும்...

அம்மா, சொன்னது இதைத்தானா?

கன்றுக்குட்டிக்கு நினைவுகள் மீள சலிப்பேற்பட்டது. ஏன் பிறந்தோம் என்றாகிவிட்டது.

பொழுது சாய்ந்தது. மேய்ச்சலுக்குப் போன மாடுகள் திரும்பி வந்துவிட்டன. தொழுவம் அமளிப்பட்டது. அவற்றின் முகங்களில் பயமும், பீதியும் தெரிந்தது. சந்தோஷத்தைக் காணவில்லை. தப்பிப் பிழைத்து வந்துவிட்டோம் என்ற உணர்வு...

இவர்களிடம் கேட்டால்...

அதற்கிடையில் எஜமான் வந்து மாடுகளை நோட்டமிட்டான். பின் அங்கும் இங்கும் ஓடினான். மாடுகளை மறுபடியும் பார்வையால் துழாவினான்.

அடுத்து... கத்தியபடி வீட்டுக்கு ஓடினான். “ஐயோ, எங்கட சிவப்பியைக் காணேல்லை.” எஜமானின் மனைவி அதிர்ந்தாள். ஒப்பாரியிட்டாள். “என்ரை ஐயோ வழிதவறி ஆட்கள் போகக்கூடாத பகுதிக்குப் போட்டுதோ?

இருவரும் புலம்பினார்கள். கன்றுக் குட்டிக்குத் தொண்டைக்குள் ஏதோ அடைத்தது. வாயைத் திறந்தால் சத்தமொன்றும் வரவில்லை. மாடுகள் பிரமை பிடித்தமாதிரிப் பேசாமல் படுத்திருந்தன. இரவு விரைந்துவர ஊர் அடங்கிப்போனது. தூரத்தில் நாய்களின் குரைப்புச் சத்தங்கேட்டது.

“கன்றுக்குட்டி ஒடுங்கிப்போனது. காணாமற்போன என் உறவினனுக்கு என்ன நடந்திருக்கும்? வழி தவறித் தொலைதூரம் போய்விட்டாரா? அவன் ஒன்றும் சின்னப் பிள்ளையில்லையே காணாமல் போவதற்கு.

அது என்ன ஆட்கள் போகக்கூடாத பகுதி? அது மனிதர்கள் போவதற்குத் தடை செய்யப்பட்ட பகுதியா?

எனது உறவினன் இந்த வாழ்க்கை பிடிக்காமல், சொல்லிக் கொள்ளாமால் ஓடிவிட்டானா?

என்ன நடந்திருக்கும்? எஜமானும், மனைவியும் இன்றும் அழுது புலம்பியபடி இருந்தார்கள்.

“ஐயோ, என்ன மாதிரியான “வடிவான மாடு...” எப்பிடி ஆப்பிட்டுதோ?

கன்றுக்குட்டிக்கு ஏகப்பட்ட கேள்விகள். தீவிரமாக யோசித்தது.

ஏன் இவ்வளவுக்குப் பயப்படுகின்றார்கள். “சிவப்பியைக் காணவில்லையென்றால்... ஒரேயடியாகத் திரும்பி வரமாட்டான், காணாமல் போய்விட்டான் என்று திடமாக முடிவுசெய்து கொள்கின்றார்களே?

யுத்தம் நடக்கும் பகுதியென்றால் இப்படி நடப்பது சகஜமா?

கன்றுக்குட்டிக்கு யோசித்து, யோசித்துச் சிரிப்பு வந்துவிட்டது.

“எவ்வளவு தைரியசாலி என் உறவினன். எல்லோருக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.”

ஹ... ஹ... ஹ... ஹ...

அசைபோட்டுக் கொண்டிருந்த மாடுகள் திடுக்கிட்டுக் கன்றுக்குட்டியைப் பார்த்தன.

என்ன இது? இப்பிடிச் சிரிக்கிறது. பார்வையால் அவைகள் கன்றுக்குட்டியைக் கேள்வி கேட்டன. அது. அவைகள் பற்றிக் கவலைப் படவில்லை.

“என்னமாதிரி நடக்கின்றார்கள். எல்லோரும் சேர்ந்து தங்கள் தோழனை ஓட வைத்துவிட்டு, இங்கு எஜமானுக்குச் சோக வேடமிட்டு நாடகமாடுகின்றார்கள்.

“அப்பப்பா, இது பொல்லாத உலகம். இனிமேல் யாரோடு தன்னும் ஒன்றும் கதைக்கக்கூடாது. அம்மாவுடனும் இது பற்றிக் கதைக்கக்கூடாது. பொறுமையாக இருக்க வேணும். தருணம் பார்த்து...

அதுவரை பொறுமை... பொறுமை...

அம்மாவும் என்னிடம் கனவிடயங்களை மறைத்து விட்டாள். இடையிடை மனிதர்கள் பெரிய “வாகனங்களில் வரும் கரும்பச்சை உடுப்பு மனிதர்களால் தங்கள் வீடுகளை விட்டுக் கூட்டிச் செல்லப்படுகிறார்கள். எல்லோரும் கூட்டம், கூட்டமாகப் போகிறார்கள். காலையில் போனால் மதியம்தான் திரும்பி வருகிறார்கள். வீட்டு எஜமானும், மனைவியும் கூடப் போய்த்தான் வருகிறார்கள்.

எல்லோரும் “உலாத்தானே” போய்வருகிறார்கள். அன்றையதினம் “சுற்றிவளைப்பு, **Round Up** என்று பேச்சு அடிபடும்.

அம்மாவிடம் கேட்டால்...

“மகனே” உனக்கிது தேவையில்லாத விடயமென்றுசொல்லி வாயை அடக்கிப் போடுவாள்.

இரண்டு நாட்களாக யாரும் மேய்ச்சலுக்குப் போகவில்லை. எஜமான் போவதற்கு விடவில்லை. கன்றுக்குட்டி எல்லோரையும் பரிதாபமாகப் பார்த்தது.

அவர்கள் இருவரும் சோகமாக நடமாடினார்கள், கதைத்தார்கள், விவாதித்தார்கள்.

அடுத்து என்ன நடக்குமோ என்ற பயம். “எத்தனை நாளைக்கு மாடுகளை மேய்ச்சலுக்கு விடாமல் வைச்சுக்கொண்டு இருக்கிறது. சாப்பாடு இல்லாமல் செத்தெல்லே போகும்.

அன்று வழமைபோல் விடிந்தது.

கன்றுக்குட்டி வழமைபோல் கயிற்றை இழுத்துப் பார்த்தது. மறுபடியும் இழுத்தது.

என்னே ஆச்சரியம்... கயிறு அறுந்து விட்டது. கன்றுக்குட்டிக்குத் தலைகால் புரியவில்லை. கடவுளே கயிறு அறுந்துவிட்டது. எனக்கு விடுதலை... எனக்கு விடுதலை...

யாரிடமும் சொல்லக்கூடாது. தருணம் பார்த்து வெளியே ஓடிவிடும்... ஓடு... நல்ல தருணம்.

கன்றுக்குட்டி துள்ளி ஓடியது. வேலிப் பொட்டுக்குள் நுழைந்து ஓடியது. ஓட ஓட அதற்கு ஆனந்தம். உல்லாசம், மகிழ்ச்சி தாங்கவே முடியவில்லை. துள்ளி விளையாடி ஓடியது.

அட உலகம் எவ்வளவு பெரியது.., இனிமையானது. அது இப்போது மனித சஞ்சாரமற்ற இடத்துக்கு வந்தது. இன்னும் பலமைல் தூரம்போக ஆசைப்பட்டது.

ஆனால் போகமுடியவில்லை. அதற்கு மனதில் திடீரென எழுந்த அச்சம்... மக்கள் நடமாட்டமேயில்லை. இடிந்த கட்டடங்கள். அவற்றை மூடிப் பச்சைக் கொடிகள்... எதிரே ஊடறுத்துச் செல்லும் முட்கம்பி வேலிக்குப் பின்னால, பச்சை நிறக் கூடாரங்கள்... அறிவித்தல் பலகை.

“உட்பிரவேசிக்கவேண்டாம்... மீறினால் தண்டனை. அப்போது காதில் விழுந்த சத்தம், வேதனை ஓலம், அவலக்குரல் திரும்பி வராத சிவப்பியின் குரல்போல...


நாடி, நரம்புகள் ஊடறுத்து என்னமோ செய்தது.

அது... அது... சிவப்பியின் குரல்...

காலில் ஏதோ தட்டுப்பட்டது. கூர்ந்து பார்த்தால் எலும்புத் துண்டுகள்... எச்சங்கள்... காதில் கேட்கும் மரண ஓலம்.

ஓ... அம்மா, சொன்னமாதிரி இது பொல்லாத உலகம்தான். எல்லா இடமும் எங்களால் போகமுடியாது. தடை செய்யப்பட்ட போகக்கூடாத பகுதி இதுதான்... கன்றுக்குட்டி மறுபடியும் திரும்பி அம்மாவிடம் ஓடத் தொடங்கியது.

# இசையிலிருந்தே பாடல் பிறந்தது!



வசன கவிதை என்று கிடையாது. அது கவிதையே ஆகாதென்று தர்க்க ரீதியாக எனக்கு விளங்கவில்லை. வசனமும், கவிதையும் வெவ்வேறு வகையைச் சேர்ந்தவை என்பது உண்மைதான். வசனம் நமக்குச் செய்தியைத் தெரிவிக்கிறது. நம்முடைய அறிவுக்கு உணவாகப் புதிய விஷயங்களைக் கொண்டுவந்து சேர்க்கிறது. எனவே, தபாலைப்போல இயங்குகிறது. கவிதை நம்முடையே தொடர்புகொள்ள முயல்வதில்லை. நம்முடைய உணர்வுடன் உறவாட முயல்கிறது. நேரிடையாக உள்ளத்தைத்தொட்டு, புதிய அனுபவத்தை எழுப்ப முயல்கிறது. தனக்குள் எரியும் சுடர்கொண்டு மற்றொரு மனத்தையும் சுடர்கொள்ளச் செய்கிறது. வசனம் உலக உண்மையை அடிப்படையாகக் கொண்டது. கவிதை மன நெகிழ்ச்சியை, மன அசைவை அடிப்படையாகக் கொண்டது.

ஆனால், வசனத்தை கவிதையைப் போல் செயற்படுத்த முடியாதா? கூடாதென்ற நியதி உண்டா? இல்லை. அந்த மாதிரிச் செயற்படும் பொழுது, வசனம் தன் தொழிலை விட்டுக் கவிதையின் தொழிலை ஏற்றுக்கொண்டு விடுகிறது என்று தான் ஏற்படும். பார்வைக்கு வசனம் உண்மையில் கவிதை.

மற்றொரு விடயம் இந்தப் பாகுபாடு தெளிவை உத்தேசித்து, இலக்கணத்தை உத்தேசித்து செய்யப்பட்டதே ஒழிய நிரந்தரமானதென்று கருதக் கூடாது. நோக்கத்தினால் அவை ஒரு பாகுபாட்டைச் சேர்ந்த தன்மையையோ, மற்றொரு பாகுபாட்டைச் சேர்ந்த பெருமையையோ அடைகின்றன. எழுதும்போது உணர்ச்சிகூடினால் தரையில் நடக்கும் வசனம் சிறகு பெற்றுக் கவிதையாகிவிடும்.

பாரதியார் "காட்சி" என்ற தலைப்பில் சில வசனக் கவிதைகளை இயற்றித் தந்திருக்கிறார்.

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வானம் இனிமை உடைத்து, காற்றும் இனிது, தீ இனிது, நிலம் இனிது.

ஞாயிறு நன்று. திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன. மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது என்று முதல் கவிதை தொடங்குகிறது.

இது வசனமா? தர்க்க அறிவுக்கு என்ன புரிகிறது. கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலல்லவா இருக்கிறது. ஆம். வசனதியாகப் பார்த்தால் விளைந்த வினை இது. இது கவிதை! செய்தி சொல்ல வந்த, விஞ்ஞானத்தை விளக்கவந்த வசனமல்ல. இயற்கை அனுபவத்தைக் கூறும் உணர்வுள்ள சொற்கள்.

எனவே வசனம் கவிதையாக முடியாதென்று முன்கூட்டியே முடிவுசெய்வது தர்க்கத்துக்கு ஒவ்வாது. மனிதனுடைய மொழிகள் அடைந்துள்ள மாறுபாட்டையும், கவிதை என்னும் துறை அடைந்துள்ள வளர்ச்சியையும் சரித்திர ரீதியாக உணராத குற்றம்தான் இம்மாதிரி அபிப்பிராயங்களுக்குக் காரணமாகிறது. கவிதையின் சரித்திரத்தைப் பார்த்தால் பாட்டிலிருந்தே கவிதை பிறந்திருக்கிறதென்று தோன்றுகிறது. இத்துறையில் அவனுடைய ஆதி குருமார்கள் என்று குயிலையும், மாட்டையும் கரிச்சானையும், நீரால் யையும், இடியையும் இவைபோன்ற எண்ணற்றவையையும்தான் கொள்ளவேண்டும். எனவே பாடினான் என்பதைவிட, இசைத்தான் என்றே கூறலாம். ஒருகால் வாயால் இசைக்கும் முன்னரே இசைக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கவும் கூடும்.

வண்டடித்த மூங்கிலில் எழும் ஒலியைக் கொண்டே, புல்லாங்குழல் கண்டு பிடித்தார்கள் என்றுசொல்லக் கேட்டிருக்கிறேன். இசைக் கருவிகளைக்கொண்டு இசையறிவு விரிந்திருக்கக்கூடும். நாதசுரத்தில் சாகித்தியத்தைப் பழக, தத்தகாரங்களே போதுமானவை என்று சொல்லப்படுவதையும் இங்கு நினைவூட்டிக்கொள்ளலாம். வார்த்தைகளை உருவிவிட்ட மெட்டைத்தானே வாத்தியத்தில் கேட்கிறோம். முதல் முதலாக, சொல்லுக்கு அதிக இடமற்ற இசையே பாட்டாக உலவிற்று என்று கருதலாம்.

மனிதனுடைய சிந்தையையும், உணர்ச்சியையும் வளர்ச்சி அடையத் தலைப்பட்டபிறகு வெறும் இசையால் உண்டாகும் இன்பத்துடன் பொருளையும், மன நெகிழ்ச்சியையும், வியப்பையும், துயரத்தையும் சொற்களின் மூலம் ஊட்டி இசைக்கு நிரநதரமான அடிப்படையையே அளிக்கலாம் என்ற ரகசியம் மனிதனுக்குப் புலனாகிவிட்டது.

சவுக்குத் தோப்பின் வழியே காற்று பாய்ந்து சென்ற பிறகு தோன்றும் ஓயு மொலி சொல்லொணாத ஏக்கத்தை உண்டாக்குகின்றதென்பது, நம்முடைய அனுபவம். ஆனால் மனிதன், உயிரின் பெரு வெள்ளத்திலிருந்து பிரிந்த தனித்துளி மூலத் தொடர்பறுந்து, வாழ்வென்னும் துயரக்கடலில் விழுந்து தத்தளிப்பாகக் கருதி தவிக்கும் ஜீவன், இந்தப் பிரிவைத் துயரத்துக்கு வேதனைப்படுவது போன்ற வேதனை தரும் சொற்களையும், இவ் வேகத்துடன் கோர்த்துவிட்டால் இசை கவிதையாகிவிடுகிறது. காற்றில் தோன்றி, காற்றில் மறையும் இசை கால் பெற்று, நிலைத்து உணர்ச்சிக்குத் தீயூட்டும் சிறப்பை அடைகிறது. இப்பொழுது இசை பெறும் குறிப்பற்ற கிளர்ச்சியாக இல்லாமல் பொருளாகப் பாட்டாகிறது, கவிதையாகிறது.

## இத்தாலி மண்ணின் இறை படைப்பிற்கு...

மைக்கல் அஞ்சலோ!
வெறு வயிற்றிற் கோர் தினாய்,
விரிந்த பெரும் பூதலத்தின்
உறு தவத்தின் ஓர் பயனாய்
உதித்த வெகு உத்தமனே!,
மறு மலர்ச்சிக் காலமதின்
முடிசூடா மன்னவனே!
மேனி உயிர் யாவையுமே
இறுதிவரை கலைக்கீந்த
இத்தாலி மண் கொடுத்த இறை படைப்பே...!,
ஓயாத உறுதியுடன்
உலகுய்ய நின்றுழைத்த
உன் பெருமை
சாயாது!

சரித்திரச் சாசனம் உன்
சிற்பத்தை, சிற்கவியை, சிறு பூச்சி
அரித்தழியாச் சித்திரத்தை
தன் உடம் பிற்
செதுக்கிச் சிலிர்க்கும்!

அழகன்னை உருவத்தை
உரித்துப் படைத்த உன் 'மடொனா'
அப்போது
உள்ளங்களிப்பாள்!,
மோஸஸ் முகஞ்சிரிக்கும்,
முகிழ்ந்து மகிழ்வினிலே
மரியாள் திளைத்து எழப்
'பியட்டா' பொலிவு பெறும்!

மைக்கேல் அஞ்சலோ!
செத்தாலும் உன் சீவன் நீ படைத்த
சித்திரத்தில், சிற்பத்தில்
முத்தான கவிதைகளில்
வித்தாய் மறைந்திருக்கு!,
உலகம் முழுதும் உனை உணர்ந்தெழுந்து
- கொள்கையிலே,
வித்து விருட்ச மென வளர்ந்து நிழல் கொடுக்கும்!,


- ஜெ.பிறேம்குமார் -

# இலக்கிய முத்து

# வான்மீகி தமிழ்ப் புலவரே

வடமொழியில் வான்மீகி இராமாயணத்தை எழுதினார் என்று எல்லோரும் அறிந்துள்ளனர். வான்மீகி இராமாயணம் என்ற பெயரில் வடமொழிப் புலவர்கள் இருவர் வடமொழியில் இராமாயாணத்தைப் பாடியுள்ளார்கள். பிராசேதர் மற்றும் இரத்தினாகரன். அவர்களில் ஒருவர் பிரம்மா இராம கதையைக் கூறியதாகத் தெரிவித்துள்ளார். நாரதர் இராம கதையைக் கூறியதாகவும் எழுதியுள்ளார். இவர்கள் இராமாயாணத்தை எழுதிய காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகும். எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கம்பன் தாம் படித்த வடமொழி இராமாயாணக் கதையை தமிழில் பாடியுள்ளார். பாடும் பொழுது தமது ஆரிய கலாசாரத்தைப் புகுத்தியும், உயர்த்தியும், திராவிட கலாசாரத்தை இழித்தும் பழித்தும் பாடியுள்ளார். அது மட்டுமல்ல, இராமனைப் பற்றிய பல விடயங்களைத் தவிர்த்தும் உள்ளார். இதனால் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் இந்த நூலில் குற்றமுள்ளது என்று கூறி, ஏற்றுக் கொள்ளாது குறைகூறினார். பொருட் குற்றம் பற்றியோ, சொற்குற்றம் பற்றியோ அக்கறை கொள்ளாது தமிழ் மரபுகளை, பாரம்பரியங்களை மதிக்காது சிலர் கம்பராமாயணத்தை பட்டை தீட்டுவதில் வியப்பில்லை. தமிழ்ப் புலவர்களின் பேரறிவும், தமிழ்ச் சங்கமும் தான் தமிழையும் தமிழர்களையும் வளர்த்தது, வாழ வைத்தது எனலாம்.

இராமாயணத்திலேயே வான்மீகி தான் கானகத்தில் சீதையைக் காப்பாற்றிக் குழந்தையுடன் வளர்த்துப் பேணியவர் என்று கூறப்படுகிறது. எனவே இராமாயணம் பாடிய சித்தா வான்மீகி கிராமக் கதையை நேரில் பார்த்துப் பாடினார். அவர் சீதையை வைத்துக் காப்பாற்றிய இடம் - தென்னாட்டில் தமிழகத்திலுள்ள பெருமுக்கல் மலையில் காணப்படும் சீதைகுகையாகும். அங்கு சீதையும் குசன் பாதம் இப்பொழுதும் காணப்படுகிறது. சுவரில் தமிழ் எழுத்துக்களால் வரையப் பட் டுள்ளது. மலையின் உச்சியில் வான்மீகி தீர்த்தம் வருடம் முழுவதும் வற்றாத சுனையாக உள்ளது. ஆகவே இராமகதை முதலில் தமிழிலேயே பாடப்பட்டது. சீதை இலவகுசன் வான்மீகி பேசிய மொழி தமிழாகும். இப்பெருமுக்கல் மலையில் வாழ்ந்த சித்தர் வான்மீகி பதினெண் சித்தர்களுள் ஒருவராவர். பதினெண் சித்தர்கள் அகத்தியரின் சீடரான தமிழ்ப் புலவர்கள் ஆகும். மூலராமாயணம் பழைய ராமாயணம் என்ற பெயரில் தமிழ்ப் பாடல்கள் காணப்படுவதாக நாராயண ஐயங்காரர் தெரிவித்துள்ளார். ஆனால் இரத்தினாகரனும் பிராசேதரும் வட இந்தியாவில் வாழ்ந்தவர்கள். தமிழ்ச் சித்தர் வான்மீகி இன்றைக்கு பதினெண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இலவகுசர்களை வளர்த்து அரச குமாரர்களுக்குரிய பயிற்சிகளை வழங்கியவர் தீரேதாயுகம் தமிழ் சோதிட கணிப்பின்படி இற்றைக்கு பதினெண்ணாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது. தமிழ் வான்மீகி திருதாயுகத்திலே இராமராவண யுத்தம் நடைபெற்றதாகத் தெரிவித்தார். இரத்தினாகரனும், பிராசேதரும், பிரம்மாவும், நாரதரும் சொல்லிய கதையை வடமொழியில் காவியமாகப் பாடியவர்கள் இவர்கள். பாடிய காலம் கலியுகமாகும்.



எனவே அவர்கள் நேரில் பார்த்துப் பாடவில்லை. சுவாமி சித்பவானந்தர் வான்மீக ராமாயணத்தை தமிழில் எழுதியுள்ளார். வழக்கறிஞரும் அரசியல் வாதியுமான கோ.ராமசாமி வான்மீகி ராமாயணத்தை தமிழில் எழுதியுள்ளார். எனவே வான்மீகி ராமாயணம் என்ற பெயரில் நூல்களை எழுதிய ஆசிரியர்கள் எல்லோருமே வான்மீகி இல்லை என்பதும் புலனாகிறது. இராமாயணம் என்றால் இராமன் வழி என்பதாகும். இராமன் அயோத்தியிலிருந்து நடந்து இலங்காபுரிவரை வந்த வழி பற்றியும் நடந்த வழியில் நிகழ்ந்த சம்பவங்களையும் எடுத்துக் கூறுவதாகும்.

இராமன் காலத்தில் வாழ்ந்து இராம கதையைப் பாடியவர்கள் வான்மீகி மட்டுமல்ல. ஆனந்தன் அனுமன் வசிட்டர் ஆகியோரும் ஆவர். ஆனந்தன் பாடியது ஆனந்த ராமாயணம். அனுமன் பாடியது அனுமந்த ராமாயணம். வசிட்டர் பாடியது வசிட்ட ராமாயணம். ஆனந்தன் இராமனின் பால்ய நண்பன். அனுமன் இராமனின் தூதன். வசிட்டர் இராமனின் குரு. இவர்களுக்கு நேரடித் தொடர்புகள் இருந்தது. புலவர் வான்மீகி பாடிய தமிழ்ப் பாடல்கள் சங்கத் தமிழ் நூல்களில் காணப்படுகிறது. அகத்தியர், தொல்காப்பியர் காலத்தில் புலவர் வான்மீகி வாழ்ந்திருக்கிறார். தமிழ்நாட்டிலேயே மிகவும் பரீட்சயம் உள்ளவராக இருந்துள்ளார்.

இராமனின் மந்திரி சுமந்திரன் வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலின் முன்னோர் என்று ,கம்பர் குறிப்பிடுகின்ற படியால் சுமந்திரனும் தமிழனே ஆகும். புறநானூற்றில் ஒரு பாடல் வான்மீகி பாடியது -

பருதி சூழ்ந்தவிப் பயன்கெழு மாநிலம்
ஒரு பகல் எழுவர் எய்தியற்றே
வையமுந் தவமுந் தூக்கிற்றவத்துக்கு
ஐயவியனைத்து மாற்று தாகலிற்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடா அள் திருவே
விடாஅ தோரிவள் விடப் பட்டோரே

இராமாயணம் எழுதும்போது இலங்கையைப் பற்றிய பகுதிக்கு சுந்தர காண்டம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமொழியாளர்கள் அழகை சௌந்தர்யம் என்றே அழைப்பார்கள். தமிழர்கள் தமது வழக்கில் அழகை சுந்தரம் என்றும் அழைக்கும் மரபு உண்டு. அந்த அர்த்தத்திலேயே சுந்தர காண்டம் என தமிழரான புலவர் தமிழர் வான்மீகி தமிழ் மரபைப் பேணியுள்ளார்.

'பாம்பின் கால் பாம்பறியும்' என்று தமிழ்ப் பழ மொழி. வடமொழி வான்மீகி இராமாயணத்தில் எடுத்தாக்கப்பட்டுள்ளது. வட மொழியில் பழமொழி எடுத்தாளப்படும் வழக்கம் இல்லை. வடமொழி இராமாயணத்தில் பாம்பின் கால் பாம்பறியும் என்ற பழமொழி வடமொழியில் மொழி பெயர்ப்பாக எடுத்தாளப்பட்டுள்ளது. சீதை அனு மனிடம் வந்தபின் காவல் மகளிர் கேள் விக்கு பதிலளிக்கிறாள்.

அனுமன் சீதையுடன் பேசிய மொழி மானுட மொழிஎன்று வட மொழியில் காணப்படுகிறது. அது தமிழ் மொழியாகும். செந்தமிழ் மொழிஎன்பதை வான்மீகி வடமொழியில் இனியமொழி மதுர மொழி என்று குறிப்பிடுகிறார். இன் தமிழ், இனிய தமிழ், தீந்தமிழ் என்பதே மதுர மொழியாகும். தமிழ் என்பது இனிமை. நீர்மை என நிகண்டு தெரிவிக்கின்றது.

இவர்கள் பாடிய காலம் கலியுகமாகும்.

கோசல தேசத்திலிருந்து இலங்காபுரி வரையும் இராமாயண காலத்தில் தமிழராகவே இருந்தார்கள். மானுடர்களினால் பேசப்பட்ட மொழி மானுட மொழியாகிய தமிழ்மொழி ஆகும். இமயம் தொடங்கி இலங்கை மாநகர் வரை இருந்த நாடுகளில் எல்லாம் வாழ்ந்த மக்களின் தாய்மொழியாக தமிழ் இருந்ததென நாராயண ஐயங்கார் தெரிவித்துள்ளார். எனவே ராமாயண காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த வான்மீகரும் தமிழ்ப் புலவரேயாவர்.

(தொடரும்)

## காட்டெருமை

காட்டெருமைகளை
இதற்கு முன் நான் நேரே கண்டதில்லை.
இப்போ:
பல இடங்களில், என் கண் முன்னால்

வெளிறிய கருமை நிறம்.
இருபுறமும் கண்களைக் குத்துமாற்போல்
வளைந்த கொம்புகள்.
மூச்சிரைந்தபடி:
நெருப்புப் பொறிபறக்கும் கண்கள்.
இரண்டாகப் பிணைத்து
நீளத்தடிகளுடன்
விதியின் குறுக்காக
சாய்த்துச் சென்றனர் இருவர்.

முழுதும் உடல் மறைத்த
சுகமான சேற்றுக் குளியலிலும்:
தலையை உயர்த்திய கொம்புகளுடன்
இன்னொருமுறை கண்டுள்ளேன்.

ஒரு நாள் இரவு:
இரண்டு சிரட்டைகளை அடித்தாற்போல்,
தட தட சத்தம்.
பலகைத் துண்டுகளை கழுத்தில் கோர்த்தபடி
ஒருசோடி காட்டெருமை முன்செல்ல
இரவு மேய்ச்சலுக்குச் சாய்த்துச்சென்றனர்.
இருட்டிலும்:
பச்சை சிவப்புக் கலந்த
அதே நெருப்புக் கண்கள்!

வீதியிலும் வயல் வெளிகளிலும்
விரட்டி வரும்போது
சற்றுத் தூர நின்றே
பயத்துடன் பார்த்ததுண்டு.

ஆனால்
எருதுடன் பிணைத்த காட்டெருமைகளை
அன்றுதான் அறிந்தேன்.
கயிறுபோட்டு பிடித்து
கட்டிப் போட்டு
கஷ்டப்பட்டு கலப்பையில் பூட்டி
இன்று வயல் உழுகிறது
எருதுடன் காட்டெருமை.
இப்போ:, அதன் கண்களைப் பார்த்தேன்.
நெருப்பை உமிழும் கண்களைக் காணவில்லை.
மிகச் சாந்தமாக.
அதன் அருகில் நான்!

– துவாரகன்.

# யாழ்.பல்கலையிலிருந்து வெளியேறும் மருத்துவர்கள்

# எமது மண்ணிலே சேவையாற்ற முன்வரவேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவிப்பு



இந்த மண்ணிலே பிறந்து மருத்துவர்களாக வெளியேறுபவர்கள் இந்தப் பிரதேச வைத்தியசாலைகளிலே கடமைபுரியும் பட்சத்திலேயே மக்களுக்கு ஒழுங்கான சுகாதார வசதி கிடைக்கும். எனவே யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறும் மருத்துவர்களை, இந்த மண்ணிலே சேவையாற்ற முன்வரவேண்டும் என நாம் அவர்களிடம் நேரில் சென்று வலியுறுத்தி வருகிறோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் அந்தப் பிரதேசத்தை சேர்ந்தவர்களே வைத்தியர்களாகக் கடமைபுரிகிறார்கள். இந்த நிலைமை யாழ்.மாவட்டத்திலும் ஏற்பட வேண்டும். இந்த விடயம் சம்பந்தமாக யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களிடம் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம். இன்னும் பல கலந்துரையாடல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வயது முதிர்ந்தும் வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை இன்னமும் பொறுப்பதிகாரியாகக் கடமைபுரிந்து வருகிறார்.

மேலும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்களே வைத்தியர்களாகக் கடமை புரிகின்றனர்.

எனவே, இந்த நிலமை மாறி இந்தப் பிரதேசத்தில் சிறந்த சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதற்கு, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் தொடர்ந்து பாடுபடுவோம் என அவர் தெரிவித்தார். (122)

## கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் பல பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

ஆண்டான்குளம், புலக்காடு ஆகிய பகுதிகளில் காலபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதால் கால்நடை வளர்ப்போர் உரியமுறையில் கட்டி வளர்க்கப்படவேண்டும் என அந்தப் பகுதி விவசாயிகள் கேட்டுள்ளனர்.

## தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு மக்கள் சார்பாக வாழ்த்து செய்தி

தேசியத் தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு, வடமராட்சி கிழக்கு மக்கள் சார்பாக வாழ்த்துச்செய்தி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 6 மணிக்கு வடமராட்சியிலிருந்து விளையாட்டுக்கழக ஒன்றிய அங்கத்தவர்கள் 50 பேர் கொண்ட குழுவினர் வடமராட்சியிலிருந்து சைக்கிளில் சென்று மாலை 6.30 மணிக்கு முல்லைத்தீவைச் சென்றடையவுள்ளனர்.

அன்று மாலை முல்லைத்தீவிலே நடைபெறவிருக்கும் தேசியத் தலைவரின் பிறந்தநாள் நிகழ்வு மேடையில் வைத்து, வடமராட்சி கிழக்கு மக்களின் சார்பான வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டுக் கையளிக்கப்படவிருக்கிறது. (21)

## திண்மக் கழிவுகளை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல்

வவுனியாவில் லஞ்சீற், சொப்பிங்பை போன்றவற்றைப் பாவனை செய்வது தற்போது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் திண்மக் கழிவு அகற்றப்படும் முறை தொடர்பான கலந்துரையாடல் நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் உக்குகின்ற குப்பைகளைப் பச்சைப் பையினுள்ளும், கண்ணாடிப் பொருட்களை சிவப்புப் பையினுள்ளும், பொலித்தீன்களை செம்மஞ்சள் பையினுள்ளும், உலோகங்களைக் கபிலநிறப் பையிலும், கடதாசிகளை நீலநிறப் பையினுள்ளும் சேகரிக்கப்படும் என முடிவு எடுக்கப்பட்டன.




## பூநகரிப் படைத்தள வெற்றி 17ஆம் ஆண்டு நினைவுவிழா

தமிழீழ விடுதலைப்புலிகளால் 1993 ஆம் ஆண்டு பூநகரிப் பகுதி இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட "தவளைப் பாய்ச்சல்" நடவடிக்கையின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு பூநகரி வாடியடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவீரராகிய கடற்கரும்புலி மேஜர் கேணேஸ், கடற்கரும்புலி மேஜர் கோபி ஆகியோரின் திருவுருவப்படங்கள் பாண்டவாத்திய இசையுடன் பூநகரி வாடியடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தில் வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரைக் கடற்புலிகளின் தளபதி பகலவன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். கடற்கரும்புலி மேஜர் கோபியின் திருவுருவப்படத்துக்கு சிறிஸ்காந்தகுமார், கடற்கரும்புலி மேஜர் கணேஸின் திருவுருவப்படத்துக்கு கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் மலர் மாலையை அணிவித்தனர்.

மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கான ஈகச் சுடரை மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர், பூநகரி வர்த்தகர் சங்கத் தலைவர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த கீரன், பூநகரி பிரதேசத் தலைவர் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

## துர்நாற்றம் வீசும் பொதுச்சந்தை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பொதுச்சந்தை கழிவுகள் உரியமுறையில் அகற்றப்படாமையால் துர்நாற்றம் வீசுகின்றது.

தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளமையால், பொதுச் சந்தையை அண்டிய பகுதிகளில் நீர்தேங்கி காணப்படுவதுடன், சந்தைக் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையால், இந்தப பகுதியில் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## புதிய வீதியால் பயணிக்கமுடியவில்லை

(மன்னார்)

மன்னார் விடத்தல்தீவுக் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வந்த வீதி, தற்போது பெய்துவரும் மழையால் வீதியில் போடப்பட்ட கிரவல் மண்ணை மழைநீர் அரித்து செல்கிறது. இதனால் இந்த வீதியால் மக்கள் பயணம் செய்ய முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்தோடு இந்த வீதியால் போக்குவரத்து செய்ய முடியாத நிலையிலுள்ளதென, இந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

## கிளிநொச்சி பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பெய்துவரும் மழையால் பல இடங்களிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியில் மழை வெள்ளம் 3 அடிக்கு மேல் பாய்ந்து கொண்டிருக்கிறது.

இதனால் திருவையாறு, இரத்தினபுரம் போன்ற பகுதிகளிலுள்ள மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைக்கு செல்கையில் பலத்த இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

அது மட்டுமன்றி, மாணவர்களின் பாடசாலை வரவும் இதனால் குறைவடைந்து காணப்படுகிறது.

மேலும் இரத்தினபுரம் பகுதியில் தற்காலிகமான பாலமொன்று போடப்பட்டுள்ளது. இது சிறிதும் பாதுகாப்பு அற்றதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


## அடிப்படை வசதிகளை விரைவில் செய்து தருவதாக உறுதிமொழி!

வவுனியா - சிதம்பரபுரம் புதிய குடியேற்றத்திட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் பல்வேறு வகையான சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக, அந்தப் பகுதி மக்களைச் சந்திக்கச் சென்ற வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் 8 வருடங்களுக்கு முன்னர் குடியமர்த்தப்பட்ட மக்களின் காணிகளுக்கு இன்று வரை காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும், அங்குள்ள 3 குழாய்க் கிணறுகள் பாரிய அளவில் சேதம் அடைந்திருப்பதன் காரணமாக, போதியளவு நீர் இல்லை என்றும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் சுகாதாரம், மருத்துவம் போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். காணிக்கான அனுமதிப் பத்திரங்களை பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டும், அடிப்படை வசதிகளைப் படிப்படியாகச் செய்து தருவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் உறுதி மொழி வழங்கினார்.

இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளும், தேசிய எழுச்சிப் பேரவையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதியிலுள்ள வெள்ளத்தால் மக்கள் போக்குவரத்துக்குத் தடையாகவுள்ளதை படத்தில் காணலாம்.

## வெள்ளத்தால் பயிர்செய்கை அழிவு

(மன்னார்)

தற்போது பெய்துவரும் மழையால் பல ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவுக்குள்ளாகியுள்ளது.

மன்னார் - பள்ளமடு, புலக்காடு கிராமத்தில் சுமார் 20 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையும், தேத்தாவாடி கிராமத்தில் 20 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையும் மற்றும் தோட்டங்கள் வெள்ளத்தால் அழிந்துள்ளன.

வெள்ளாங்குளத்தில் மிளகாய்த் தோட்டம், பாலியாறுக் கிராமத்தில் மிளகாய், பூசணி, பயறு போன்றன வெள்ளத்தால் அழிந்துள்ளதெனத் தெரியவருகிறது.

## முல்லைத்தீவு - ஒதியமலை கிராமத்தில் இதுவரையில் பஸ்சேவை இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒதியமலை கிராமத்தில் பஸ்சேவை இல்லாததால் மீளக்குடியமர்ந்துவரும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி இந்தக் கிராமத்தில் 32 அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர், இந்தக் கிராமத்தில் மக்கள் முற்றாக இடம்பெயர்ந்தனர்.

1999 ஆம் ஆண்டு ஓயாத அலைகள் - 3 நடவடிக்கைமூலம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது.

இதன்பின்னர் 171 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். இந்தப் பகுதியில் தற்போது பஸ்சேவை இடம்பெறாததால் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாதநிலை காணப்படுகின்றது. இவர்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அயல் பிரதேசத்துக்குச் செல்லவேண்டியுள்ளது.

இந்தக் கிராமத்தில் முன்னர், மூன்றுநேர பஸ்சேவை பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளை தரமுயர்த்துவதற்கு முயற்சி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்ற முன்பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்கும், நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதற்கும், அரச காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த விடயம் சம்பந்தமான கூட்டம் கடந்த 3 ஆம் திகதி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக அதிகாரிகள், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், முன்பள்ளி ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகச் சென்று மக்களுடன் கலந்துரையாடி விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது எனவும் இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் 22 முன்பள்ளிகள் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.(122)



வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சை, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ரீ.ஞானவேல், அகில இலங்கை தமிழ் காங்கிரசின் வன்னி கிளைத் தலைவர் கே.ஏ.செந்தில்நாதன் ஆகியோரை படத்தில் காணலாம். படம்:கனகரவி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல*
*நீர்மை உடையார் சொலின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## யாகாவாராயினும் நாகாக்க...!

எதிர்பார்த்தது போன்றே இந்த முறையும் சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் தொடர்பாக எந்தவொரு ஆக்க பூர்வமானதும், நம்பிக்கை தரும் வகையிலுமான யோசனைகள் எதனையும் ஜனாதிபதியால் முன்வைக்க முடியாது போய்விட்டது மட்டுமல்ல இனிமேலும் கூட அவரால் இது குறித்த ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாது என்ற கருத்து நிலைப்பாட்டையும் அவரது செயற்பாடுகள் தொடர்ந்தும் உணர்த்தவே செய்கின்றன.

அவர் தொடர்ந்தும் புலிகளைக் குற்றம் சுமத்துவதிலும் அர்த்தமற்றதும், ஆதாரமற்றதுமான கற்பனைப் புரளிகளைக் கட்டிவிடுவதிலும் தீவிர முனைப்பைக் கொண்டவராக இருப்பதன் காரணமாக அவர்மீது சமாதான முயற்சிகள் தொடர்பாக சர்வதேச சமூகம் கொண்டிருந்த அற்ப சொற்ப நம்பிக்கைகளும் வற்றிப்போகத் தொடங்கியுள்ளது என்றே கூறவேண்டும்.

இத்தகைய அவநம்பிக்கையுடன்தான் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் இந்த முறை கொழும்பு விஜயத்தை மேற்கொண்டிருந்தார் என்பதை நினைவிற் கொள்வது நல்லது. அவரது எதிர்வுகூறல் மிகச் சரியானதாகவே இருந்துள்ளதைக் கடந்தவார பேச்சுவார்த்தை முயற்சிகளின் எதிர்காலம் குறித்த பேச்சுவார்த்தைகள் நிரூபித்துள்ளன. ஜனாதிபதியிடமிருந்து உறுதியான - நேர்மையான - நம்பிக்கையூட்டும் ஆக்கபூர்வமான பதிலெதுவும் கிடைக்காததால் பீற்றர்சன் அவர்கள் உடனடியாகவே ஹெய்ரோ திரும்பிவிட்டார்.

பேச்சுக்களை முன்னெடுக்கும் விருப்பார்வத்துடன் செயற்படும் விடுதலைப்புலிகள் அரசிற்கு நோர்வே தூதுக் குழு மூலம் அனுப்பிய யோசனைகளுக்குப் பதிலளிக்கும் மனோவிருப்பு ஜனாதிபதியிடம் இல்லாமற்போனது, நோர்வே தூதுக்குழுவுக்கு மட்டுமல்ல சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்துக்கும் ஏமாற்றமளிக்கும் விடயமாகிவிட்டது. அடுத்து என்ன செய்வது என்பது நோர்வேக் குழுமுன் இப்போது எழுந்து நிற்கும் விடை காண முடியாத கேள்வியாகும்.

ஜனாதிபதி தற்போதைக்கு அமைதிப்பேச்சுக்கள் குறித்து எதையும் தீர்க்கமாகச் சொல்லும் வலுக்கொண்டவராக இல்லை என்று கூறுவதை விடவும், அவரது பாரம்பரியப் பேரினவாதக் கோட்பாடுகள் அவரை எந்தவிதத்திலும் அதனை அனுமதிக்கப் போவதில்லை என்பதே உண்மை.

சமாதானம் என்ற வார்த்தையே சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மனவிருப்பின்றி பயன்படுத்தி அரசியல் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும் உள்நோக்கம் கொண்டவர்களாகவே பெரும்பான்மைச் சிங்கள ஆட்சித் தலைமைகள் இருப்பதனாலேயே இலங்கை விவகாரம் அந்நிய சக்திகள் இந்த மண்ணில் தங்கள் தங்கள் ஆதிக்க அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள, இலகுவாக ஊடுருவக் கூடியதாக உள்ளமைக்குக் காரணமாகும்.

சிங்களத் தலைமைகளின் இந்தத் தொலைநோக்குப் பார்வையற்ற அணுகுமுறைகள் இலங்கையை நாளுக்கு நாள் பேரவலப்படுகுழியை நோக்கித் தள்ளிக் கொண்டிருக்கிறது என்பதை தென்பகுதி மக்களும் ஏனைய சமாதான விரோத சக்திகளும் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான் பரிதாபத்திற்குரிய விடயம்.

இலங்கை அரசு மீண்டும் இராணுவ நோக்கிலேயே சமாதானத்தை எட்டமுடியுமென்று தப்புக் கணக்குப் போடுகிறது. கடந்தகால போரனுபவத்திலிருந்து சிங்களதேசம் எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது.

எல்லாவகையிலும் ஒரு சமாதானத் தீர்வை எட்டும் வாய்ப்புகள் மிகவும் சாதகமாகவும், பிரகாசமாகவும் இருக்கும் சூழலை மனித உணர்வுடனும் ஜனநாயகப் பண்புடனும் பயன்படுத்தத் தவறும் சிங்கள ஆட்சித் தலைமைகள் ஒரு பெரும் வரலாற்றுத் தவறைச் செய்யப் போகின்றார்கள் என்பது மட்டும் தெளிவும் உறுதியுமாகும்.

ஜனாதிபதிதான் அந்தத் தவறுகளின் எதிர்விளைவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கப்போகிறார். அவர் இன்னமும் தமிழர்களை இராணுவரீதியில் ஒடுக்கும் கொள்கையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை என்பதையே சமாதான முயற்சிகளில் அவர் காட்டும் அலட்சியம் உறுதி செய்வதாக உள்ளது.

அது மட்டுமல்ல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஆயிரம் முரண்பாட்டு மோதல்களையும், அசிங்கமான பகையுணர்வையும் வளரவிட்டுக் கொண்டு புலிகளுக்குள் முரண்பாடு என்று கதைவிட்டு கதை மாற்றப் பார்க்கும் ஜனாதிபதியின் புரளி கிளப்பும் நடவடிக்கை உண்மையில் சமாதானத்தை அவர் எட்டி உதைக்கும் உள்நோக்கத்தைக் கொண்டுள்ளதையே தெளிவு படுத்துகிறது.

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு- என்ற வள்ளுவர் குறளை ஜனாதிபதிக்கு எவராவது நினைவு படுத்துவது நல்லது.

## நாடும் நடப்பும்




### வடமராட்சி – கிழக்கில்

# வீடுகளைப் பார்வையிட விரும்புபவர்களின் விபரங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று, தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கும், அங்குள்ள பயன்தரும் மரங்களிலிருந்து அறுவடைப் பொருட்களை எடுத்துவருவதற்கும் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை எழுதுமட்டுவாள் கட்டளைத் தளபதி டி.ஆ.டீ சில்வாவுக்கும், கிராம அலுவலர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

வடமராட்சி கிழக்கில் அம்பன், நாகர்கோவில் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், தமது சொந்த வீடுகளைச் சென்று பார்வையிடுவதற்கும் அங்குள்ள, மா, தென்னை மற்றும் பயன்தரும் மரங்களிலிருந்து அறுவடை செய்வதற்கு அனுமதிக்குமாறு படையினரிடமும், அந்தப் பகுதி கிராம அலுவலர்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவர்களது கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக கிராம அலுவலர்களுடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட கிராம அலுவலர்கள் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லாமையால், எதிர்நோக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள், தொடர்பாக படையினருக்கு விளக்கமளித்தனர்.

இதனை அடுத்து இவர்களை அனுமதிப்பதற்கு இணக்கம் தெரிவித்ததுடன், வீடுகளுக்குச் செல்ல விரும்புபவர்களின் பெயர்ப்பட்டியலை தமக்கு அனுப்பிவைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

# வலி. மேற்கில் மழையால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் வலி.மேற்கின் பல பிரதேசங்கள் வெள்ளக் காடாகக் காட்சி தருகின்றன.

வலி.மேற்குப் பிரதேசங்களான மூளாய், சுழிபுரம், பொன்னாலை ஆகிய கிராமங்களில் காணப்படும் நெல்வயல்களே மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தின் தாழ்வான பகுதி வயல்கள் முழுமையாக வெள்ளத்தில் மூள்கியுள்ளமையால் பல ஹெக்ரெயர் கணக்கான நெற்பயிர்கள் நாசமாகியுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் காணப்படும் பானாவெட்டிக்குளம் போன்ற சில குளங்கள் நிரம்பியுள்ளதுடன், உடைப்பெடுக்கும் அபாயமும் காணப்படுகிறது. இன்னும் சில நாட்கள் மழை தொடர்ந்தால் இந்தக் குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயமும் உள்ளது.

வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. மூளாய் - மாவடிச்சந்தி வீதியில் தாழ்வான இடங்களில் வீதியை மேவி வெள்ளம் பாய்ந்து வருகிறது. இதனால், இந்த வீதியூடான போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் தார் வீதிகள் வெட்டியகற்றப்பட்டு ,மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

சுழிபுரம் கம்மனை முகாம் போன்ற சில முகாம்கள் பெருமளவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. பல குடிசைகளில் நீர் உட்புகுந்து காணப்படுகிறது. இதனால் இந்த முகாம்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இன்னும் சில நாட்கள் மழை தொடர்ந்தால், முழுமையாக வலி.மேற்குப் பிரதேசத்தின் இயல்புநிலை பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது. (207)

# உப அஞ்சல் அலுவலகத்தை திறக்கக் கோரிக்கை

கடந்த பல வருடங்களாக மூடப்பட்டிருக்கும் கிளாலி உப அஞ்சல் அலுவலகத்தைக் கிளாலி கிராம மக்கள் இடம்பெயர்ந்து வாழும் அல்லிப்பளைக் கிராமத்தில் திறந்து இயங்க வைக்குமாறு பொதுமக்களும் பொது அமைப்புக்களும் பளை அஞ்சலதிபர், வவுனியா மாவட்ட பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஆகியோருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். (21)

# அரசாங்கப் பாடசாலைகளில் அடுத்தவருடம் புதிய பாடம் அறிமுகம்

அடுத்தவருடம் முதல் அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 10 இல் வடிவமைப்பும், தொழில்நுட்பவியலும் என்னும் புதிய பாடம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

முன்னோடி நடவடிக்கையாக நாடு முழுவதிலும் 50 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, மேற்படி பாடம் போதிக்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வலிகாமம், மன்னார், அம்பாறை, திருகோணமலை, கல்குடா ஆகிய ஐந்து கல்வீ வலயங்களிலும் இருந்து ஆறு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, மேற்படி புதிய பாடம் புகட்டப்படவுள்ளது.

புதிய பாடத்தைப் போதிக்கும் நடவடிக்கைகளில் முதற் கட்டமாக பாடத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், சேவைக் கால ஆலோசகர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு துறைசார்ந்த பயிற்சி களை தேசியகல்வி நிறுவகம் வழங்கவுள்ளது.

மனைப்பொருளியல், விவசாயம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களோடு இணைந்ததாக வடிவமைப்பும், தொழில்நுட்பவியலும் என்னும் புதிய பாடமும் அடுத்த வருடம் முதல் தரம் 10 அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தேசியகல்வி நிறுவகத்தின் செயற்திட்ட அதிகாரி லொக்கு விதான தெரிவித்தார். (122)

# பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறாமல் வெளியிணைப்பு இயந்திரங்கள் கொண்டுவரத் தடை!

(புளியங்குளம்)

புளியங்குளம் இராணுவ சோதனைச் சாவடி ஊடாக மீன்பிடிப் படகுகளுக்கு பொருத்தப்படும் வெளிஇணைப்பு இயந்திரங்களை எடுத்து வருவதற்கு படையினர் தடை விதித்துள்ளனர். பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினால் மட்டுமே வெளிஇணைப்பு இயந்திரங்களை எடுத்து வருவதற்கு அனுமதிக்கப்படும் என்று படையினர் தெரிவித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடபகுதிக் கடற்தொழிலாளர் தமக்குத் தேவையான 25 குதிரைவலுவும், அதற்குக் குறைவான குதிரைவலுவுள்ள வெளியிணைப்பு இயந்திரங்களைக் கடற்தொழில் உபயோகத்துக்கு எடுத்துச் செல்லலாமெனப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் வர்த்தமானிப் பத்திரிகைமூலம் விளம்பரப் படுத்தப்பட்டது.

கடற்தொழிலாளர்கள் தமக்குத் தேவையான வெளியிணைப்பு இயந்திரங்களைத் தடையெதுவுமின்றி எடுத்து வந்து கடற்தொழிலில் ஈடுபட்டனர்.

கடந்த ஒருமாத காலமாக 15, 25 குதிரைவலுவுள்ள வெளியிணைப்பு இயந்திரங்களைப் புளியங்குளம் சோதனைச் சாவடியூடாக, வடபகுதிக்கு எடுத்துச் செல்லப் புளியங்குளம் சோதனைச் சாவடி முகாம் இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர்.

15, 25 குதிரைவலுவுள்ள வெளியிணைப்பு இயந்திரங்களை வடபகுதிக்கு எடுத்துச்செல்லப் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு அனுமதி பெறவேண்டுமென இராணுவத்தினர் தெரிவித்துள்ளனராம்.

இதனால் வடபகுதிக் கடற்தொழிலாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (21)

அரசியல் கட்டுரை.... எஸ்.எம்.ஜீ

# சமாதான முயற்சியும் சந்திரிகாவின் ஏமாற்றும்



(நேற்றைய தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிகரு வந்ததும் விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை வரவேற்று, அரசும போர் நிறுத்தம் செய்வதற்கு சம்மதித்தது. இதன்பின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நோர்வேயின் அனுசரணையுடன் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரும்கூட, சந்திரிகா அம்மையார் இதை எதிர்த்து எதுவும் சொல்லவில்லை.

இதன்பின் ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டது. கைதிகள் விடுதலை, போக்குவரத்துத் தடைகள் பல நீக்கப்பட்டன. சிங்கள மக்கள், வியாபாரிகள் தடையின்றி வடக்கேயும், கிழக்கேயும் சென்றுவரத் தொடங்கினர். வடக்கே எடுத்துச் செல்வதற்கு மருந்துகள் உட்பட பல பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.

நாட்டில் பழைய நிலைமை திரும்பிக் கொண்டிருந்தது. இனங்களுக்கிடையே படிப்படியாகப் பழைய உறவுகள் விரிந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளும், நோர்வேயின் அனுசரணையுடன் தொடங்கியது. இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் நோர்வேக்காரர்கள் தகவல் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

போதாக்குறைக்கு சந்திரிகாவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்குச் சென்றுவந்தனர் - கதிர்காமரும் போய்வந்தார். இந்தியா - இலங்கை விவகாரத்தில் தலையிடாது என்று சொல்லி வந்தார்கள். இந்தியாவின் நலனைப் பாதிக்காமல் இலங்கையில் அமைதி ஏற்படவேண்டுமென்றும் சொன்னார்கள்.

இந்திய அதிகாரிகளும் இலங்கைக்கு வந்து போனார்கள். இலங்கையிலிருந்த இந்தியத்தூதுவரும் இங்கு தமிழ்ப் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தும் பேசிவந்தார். அவர் டில்லிக்குச சென்று ஆலோசனையில் கலந்து வந்தார்.

இதனிடையே விடுதலைப் புலிகளுக்கும், ரணில் அரசுக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமானது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கு முன்னேறினால் பாதிக்கப்பட்டும், புலம்பெயர்ந்துள்ள மக்கள் புனர்வாழ்வு பெறவும், பாதிக்கப்பட்ட இடங்களைப் புனரமைக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமென, விடுதலைப் புலிகள் எடுத்துக் கூறினர்.

இதற்கென இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று - ஏறபடுத்தப்பட வேண்டுமென்று அவாகள் தெரிவித்தனர். இதற்குச் சம்மதித்த அரசுத தரப்பு இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்கான திட்டமொன்றைத் தயாரித்துக் கொடுத்தனர். இது பாதிக்கப்பட்ட மக்களின் தேவையை நிறைவேற்றவில்லையென்று கூறி, விடுதலைப்புலிகள் நிராகரித்தனர். மீண்டும் ஒரு திட்டத்தை ரணில் அரசு தயாரித்தது. இதுவும் சரியாக அமையவில்லையென்று கூறிய விடுதலைப்புலிகள் தாமே ஒரு இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்தை வரைந்து தருவதாகச் சொன்னார்கள். அரசும் ஏற்றுக் கொண்டது. உள்நாட்டில் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனையில் கலந்த விடுதலைப்புலிகள் வெளிநாடுகள் பலவுக்கும் சென்று, சட்ட வல்லுநர்கள், அரசியல் ஆய்வாளர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடி இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபையை அமைப்பதற்கான திட்டவரைபொன்றை ரணில் அரசிடம் கையளித்தனர்.

இந்தத்திட்ட வரைபு பற்றி உள்நாட்டு - வெளிநாட்டு ஆய்வாளர்கள், ஊடகங்கள் தமது கண்ணோட்டத்தில் விநோசித்தன. இந்தியத் தரப்பு இது நாட்டைப் பிரிக்கும் என்று பொதுவாக விமர்ச்சித்தது.

இந்தத் திட்டம் ஒஸ்லோ மாநாட்டுப் பிரகடனத்தைவிட அதிகம் என்பது அமெரிக்காவிலும் குரல் எழுந்தது. ரணில் அரசின் சார்பில் பேச்சு வார்த்தைகளுக்கும் பொறுப்பாக இருந்த அமைச்சர் பீரிஸ் இந்த வரைபுத் திட்டம் அதிகபட்சமானாலும் இதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கலாம் என்று கூறியிருந்தார்..

இந்தச் சந்தர்ப்பதில்தான் - நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சந்திரிகா தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, பிரதமர் ரணில் அமெரிக்கா சென்ற வேளையில் மூன்று அமைச்சுக்களை யும் பொறுப் பேற்று, அமைச்சர்களை நீக்கி, இறுதியில் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

பொதுத் தேர்தலில் சந்திரிகா அம்மையாரின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டன. முன்னெப்போதையும்விட, இந்தத் தேர்தலில் ஜே.வி.பி அதிக ஆசனங்களைக் கைப்பற்றியது. எனினும் இந்தக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஆட்சி அமைத்தது. சுதந்திரக் கட்சியின் சமாதான முயற்சிகளும், விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபை நீதித் திட்டத்துக்கும், ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றபோதிலும் நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்கும் வாய்ப்பில்லாமலே அரசாங்கம் ஆட்சிசெய்துகொண்டிருக்கிறது.

இப்பொழுது சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் முறுகல் நிலை மேலோங்கிக் கொண்டிருந்தாலும், நாடாளுமன்றத்தில் தமது ஆட்சியை நிலையானதாக்கிக் கொள்வதற்காக சந்திரிகா அம்மையார் தொடர்ந்து முயற்சிசெய்து வருகிறார். இதில் ஓரளவு வெற்றியும் பெற்றுவருகிறார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவைப் பெற்றுவிட்டார். முஸ்லிம் எம்பிக்கள் சிலரின் அதரவையும் பெற்றிருக்கின்றார். வேறுசில எம்பிக்களையும் தமது பக்கம் இழுத்துக் கொள்வதற்கு அம்மையார் முயற்சிசெய்து வருகிறார். இனி ஒரு பொதுத் தேர்தல்களால் மீண்டும் வெற்றி பெறமுடியுமா என்ற ஐயத்திலுள்ளவர்கள் ஆளும் கட்சியில் சேர்வதும் இயல்பு.

தேர்தலில் கொடுத்த வாக்குறுதியை சந்திரிகா அம்மையாரின் அரசு நிறைவேற்றவில்லை. வாழ்க்கைச் செலவு உயர்ந்து விட்டது என்பது எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்புக் குரல் எழுப்பி, போராட்டத்துக்கு மக்களைத் தூண்டிவிட்டாலும் ஊடகங்கள் பலவும் சமாதானப் பேச்சில், விடுதலைப் புலிகள் வெற்றியீட்டிவிடக் கூடாதென்பதையும் புலிப் பூச்சாண்டிக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபைத்திட்ட வரைவுடன் தொடங்குவதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி சம்மதம் தெரிவித்திருக்கிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இதை ஆதரிக்கிறது.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு சந்திரிகா அம்மையார் காலம் கடத்தியே வருகிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் காலம் கடத்தி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது சிங்கள ஆதிக்க சக்திகளின் தந்திரோபாயமென்பது கடந்த கால வரலாறு.

சந்திரிகா அம்மையாரின் தகப்பன் எஸ்.டி.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க மட்டும் அன்றிருந்த சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளை நிறைவேற்றி தமிழரசுக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்ய வேணடிய அவசரத்திலும், அவசியததிலும் இருந்தார்.

1956 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து 1957 ஆம் ஆண்டில் பெரும் போராட்டம் நடத்தி, நாட்டையே ஸ்தம்பிக்கச் செய்யப் போவதாகத் தமிழரசுக் கட்சி அறிவித்தது. இந்தப் போராட்டம் பற்றிய பிரகடனம் திருகோணமலையில் நடைபெறும்.

தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் வெளியிடப்படுமென்றும் அறிவித்திருந்தது. இந்த மாநாட்டுக்காக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் திருமலை நோக்கிபபாத யாத்திரை செய்து கொண்டிருந்தனர்.

இதனையறிந்த பிரதமர் பண்டார நாயக்க தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை பேச்சுக்காக அழைத்தார். இருவரும் இரவு பகலாகத் தமது உதவியாளர்களுடன் சேர்ந்து இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்காகப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்களின்போது 'இன்று இனப்பிரச்சினைக்கு நாங்கள் ஒரு தீர்வு காணாவிட்டால், நாளைய தமிழ் இளைஞர்கள் நாட்டைப் பிரிக்கக்கோரி போராடக் கூடும்' என்று பண்டாரநாயக்க எச்சரித்திருந்தார்.

இதனால் பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக நிறைவேற்றி, உடன்பாட்டுக்கு வருவதில் பண்டாரநாயக்க குறியாக இருந்தார்.

இப்பொழுது தமிழரசுக் கட்சியினரின் எதிர்ப்பைச் சமாளிப்போம். பின்னர் நடப்பதைப் பார்ப்போம் என்று பண்டாரநாயக்க முடிவு செயதிருந்தாரோ தெரியாது.

தந்தை செல்வாவுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பேச்சுக்களை நடத்தி, உடன்பாட்டுக்கு வந்த பண்டாரநாயக்கவும். தந்தை செல்வாவும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாததிட்டனர். வடக்கு - கிழக்கு மாகாணங் களில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தமாக இது இருந்து வருகிறது.

கிழக்கிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட பிரதேசசபைகளை அமைக்கவும்; இந்தப் பிரதேசசபைகள் விரும்பினால் தாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தீர்மானிக்கலாமென்றும் இந்த ஒப்பந்தம் கூறியது. கல்வி, காணி, குடியேற்றம் முதலிய அதிகாரங்களுள் இந்தப் பிரதேசசபைகளுக்கு வழங்குவதற்கு இந்த ஒப்பந்தம் வகைசெய்தது.


இந்த ஒப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர் தலைமையிலான எதிர்ப்புப் போராட்டத்தால் கிழித்தெறியப்பட்டதென்பது வேறு கதை.

ஆனால் இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் ஒரு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமென்ற முயற்சியில், பண்டாரநாயக்க குறியாக இருந்து பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தையும் கைச்சாத்திட்டதை மறைக்க முடியாது. இது ஒன்றுதான நிறைவேறிய பேச்சுவார்த்தை

டட்லியும், செல்வாவும் நடத்தியவை அந்தரங்கமாக நடந்தவை. அது கொழும்பிலுள்ள தொண்டமானின் இல்லத்தில் நடந்தமை அந்த இரகசிய ஒப்பந்தமும், பின்னர் கிழித்தெறியப்பட்டது.

இதன் பின்னர் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணபபடவேண்டுமென்று, இன்றுவரை பேசப்படுகிறதேயொழிய பேச்சவார்த்தைகளை ஆரம்பித்து ஒரு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை. ஆனால் பேச்சுவார்த்தைகளைக் காலம் கடத்துவதற்கு ஆட்சியிலிருந்தவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழீழ அரசை மீண்டும் அமைப்போம் என்று, தமிழ் மக்களிடம் ஆணை பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அது பற்றி



ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிரதமர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் பேசவே முடியவில்லை.

தேர்தல் முடிவு வெளிவந்ததுமே யாழ்ப்பாணத்தில் நடந்த களியாட்ட விழாவொன்றில் கலகத்தை ஆரம்பித்து வைத்த பொலிஸார் நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கெதிரான இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவதற்கு காரணமாயிருந்தனர். இந்தச் சம்பவத்தை வைத்து தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டுத், தடுத்து வைக்கப்பட்டனர். இனக் கலவரம் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் ஜே.ஆர் அதை எப்படித் தமிழ் மக்களுக்கெதிராகப் பயன்படுத்தினார் என்பது பற்றியே கூட்டணியினர் பேசுவதற்கு முடிந்தது. தமிழீழ அரசை மீண்டும் அமைக்கும் முயற்சிகள் எதையும் செய்யமுடியவில்லை. 1977 ஆம் ஆண்டு கலவரம் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோணி ஆணைக்குழு விசாரணையும், கூட்டணியின் காலத்தைச் செலவிடவைத்தது.

இந்தத் தேர்தலில் ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி - தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சகல கட்சிகளையும் வட்ட மேசைமாநாடு கூட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக உறுதியளித்திருந்தது. ஜே.ஆர். பிரதமரானதும் அந்த வாக்குறுதியை இனக்கலவரத்துடன் சுலபமாக மறந்துவிட்டனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத்தாம் வருவதற்காக புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதில் அவர் தமது காலத்தைச் செலவிட்டார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வட்ட மேசை கூட்டுவதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்தில் பிரதமர் என்ற முறையில் உரையாற்றும் போது, 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்று எரியும் நெருப்பில் எண்ணை வார்ப்பது போல் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டார்.

1983 ஆம் ஆண்டில் திட்டமிட்டு நாடுமுழுவதிலும் தமிழ் மக்களுக்கெதிரான இனக் கலகம் தூண்டிவிடப்பட்டு தமிழர்களின் சொத்துக்கள் யாவும் அழிக்கப்பட்டதுடன, உயிர்ப் பலியும் எடுக்கப்பட்டன.

இந்த நிலையில் தான் இனப்பிரச் சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா உதவத்தயார் என்று அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி ஜே.ஆருக்குச் சொன்னார்.

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி ஜே.ஆருடன் தொடர்புகொண்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயறசிகளை மேற்கொள்ளுமாறு சொன்னதும், ஜே.ஆர் மறுப்பெதுவும் சொல்லவில்லை. உடனடியாகவே வட்டமேசை மாநாட்டைக் கூட்டுவதாக அறிவித்தார். இந்த வட்டமேசை மாநாடு பின்னர், சர்வகட்சி மாநாடாகிப் புத்தபிக்குகளும் இடம்பெற்ற மாநாடாக மாறியது. பலிப்பானே, சந்தானந்த தேரர் இந்த மாநாட்டின் இறுதியில் நீண்டதொரு உரை நிகழ்த்தினார். சர்வகட்சி மாநாடு நீண்டுகொண்டே சென்றது. இந்தச் சமயத்தில் அன்னை இந்திரா தமது மெய்க் காப்பாளர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்திராவின் கொலையுடன் ஜே.ஆர் சர்வகட்சி மாநாட்டை முடிவு எதுவுமில்லாமலே ஒத்திவைத்தார். இந்த சர்வகட்சி மாநாட்டை அவர் காலங்கடத்துவதற்காகவே பயன்படுத்தினார். இந்திராகாந்தியின் மறைவு ஜே.ஆருக்குச் சாதகமாக அமைந்தது. தமிழ் மக்களுக்கும் பெரும் தீங்காக அமைந்தது. இந்திராவின் சார்பில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் உதவியாளராக இருந்த ஜி.பார்த்தசாரதியை ஜே.ஆருக்குப் பிடிக்கவில்லை. இது மட்டுமல்ல, வெளிவிவகார அமைச்சில இலங்கை விவகாரத்தில் செயற்பட்டுவந்தவர்களையும் அங்கிருந்து இடமாற்றம் செய்வதிலும், இந்திராவுக் குப் பின் பிரதமர் பதவிக்கு வந்த அவர் - மகன் ராஜீவ்காந்தியைக் கொண்டு செயற்படுத்தினார். இதன்பின் இந்திய வெளிவிவகாரச் செயலராகவந்த ரமேஷ் பண்டாரி இலங்கையின் தாளத்துக்கெல்லாம் ஆடினார். ராஜீவ்காந்தியை ஜே.ஆர் ஒரு பெடியனாகவே கருதித் தமது வழிக்குக் கொண்டுவந்தார். இதன் பின் இந்தியத் தூதுவராக வந்த ஜே.என்.திக்ஷத்தின் உதவியுடன் ராஜீவ்காந்தியுடன் இலங்கைத் தமிழ் மக்களின் கருத்தையறியாமலே அவர்களுடைய பிரச்சினைக்கு ஒரு ஒப்பந்தமும் செய்தார்.

ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நன்மை செய்ததைவிடத் தீமையே செய்தது. இலங்கைக்கு அமைதிக்காகவென வந்த இந்திய அமைதிப் படை ஆக்கிரமிப்புப் படையாகமாறி அட்டூழியம் செய்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் செயற்படுத்த வேண்டிய அம்சங்கள் பல இருந்தும், விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதிலேயே ஜே.ஆரின் விருப்பப்படி இந்தியப் படை முதலில் இறங்கியது.

ஜே.ஆரின் பதவிக்காலம் முடிந்ததும் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வந்த ஆர்.பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த முன்வந்தார். இந்திய அமைதிப் படையைத் திருப்பி அழைக்கும்படி இந்தியாவைக் கேட்டார். பிரேமதாசாவுக்குத் தெரியாமல் அவர் இலங்கையில் இல்லாத சமயத்தில் தான் ஜே.ஆர் - ராஜீவ்காந்தியுடன் ஒப்பந்தம் செய்திருந்தார். இந்த ஒப்பந்தத்தைப் பிரேமதாசா ஏற்றுக்கொள்ளவில்லை. பிரேமதாசாவும் பேச்சுவார்த்தை என்று சொல்லி, காலம் கடத்திக் கொண்டு ஜே.வி.பியை ஒழித்துக் கட்டியது போல விடுதலைப் புலிகளையும் ஒழித்துக் கட்டுவதற்குத் திட்டமிட்டார்.

# ஈராக்கின் பலூஜா நகர் அமெரிக்கப் படைகள் வசம்




ஈராக்கியத் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த பலூஜா நகர் ஒருவாரத் தாக்குதல்களின் பின்னர் அமெரிக்க ஈராக்கியக் கூட்டுப்படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டொனால்ட் றம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளின் பூரண கட்டுப்பாட்டின்கீழ் இருந்த பலூஜா நகரினைத் தமது பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளபோதும், நகரின் உள்ளே ஆங்காங்கே மறைந்திருக்கும் ஈராக்கியத் தீவிரவாதிகளுக்கும், அமெரிக்கக் கூட்டுப்படையினருக்கும் இடையே சிறுசிறு மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் அமெரிக்கப் படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை இடம்பெற்ற மோதல்களில் 1200 ஈராக்கியத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 200 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சர் காசீம் தாவூத் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இதுவரை 31 அமெரிக்கப் படையினரும், 6 ஈராக்கியப் படையினரும் கொல்லப்பட்டுள்ளதாகவும், 180 அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளதாகவும் அமெரிக்கப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் அமெரிக்கப் படையினரால் வெளியிடப்பட்டுள்ள இழப்புப் பற்றிய தகவல்களிலும் பார்க்க அமெரிக்கப் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் அதிகம் எனத் தெரிவித்துள்ள செய்தி ஊடகங்கள் தீவிரவாதிகளின் தாக்குதலில் அமெரிக்கப் படையினரின் ராங்கிகள் உட்பட போர்த்தளபாடங்களும் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

பலூஜா நகரின் பல பகுதிகளிலும் இறந்த சடலங்கள் காணப்படுவதாகவும், அவற்றில் பெரும்பாலான சடலங்கள் அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பலூஜா நகரில் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடாத்துவதாகவும் பல வீடுகளிலும், பள்ளிவாசல்களிலும் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பாரியளவிலான ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்கக் கடற்படை அதிகாரியான கோல்மைக் சூப் தெரிவித்தார்.

மேலும் சில வீடுகளில் பொதுமக்கள் அச்சத்தினால் தங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ள கோல் சூப் - பலூஜா நகரில் தீவிரவாதிகளைத் தேடிவரும் படையினருக்குத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்வதற்காக வீடுகளில் தங்கியிருக்கும் பொதுமக்கள் வீடுகளைவிட்டு வெளியேறிச் செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பலூஜா நகருக்கு அனுப்பிய மனிதாபிமான உதவிப் பணிகளை அமெரிக்கப் படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக மனிதாபிமான உதவிப்பணிகளை அனுமதிக்கமுடியாது என அமெரிக்கப்படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உலக நோக்கு

## வசிறிஸ்தான் மாகாணத்தில் கிளர்ச்சிவாதிகளின் பல முகாம்கள் பாகிஸ்தான் படையினரால் அழிப்பு!



ஆப்கானின் எல்லைப்பகுதியிலுள்ள பாகிஸ்தான் கட்டுப்பாட்டுப்பகுதியான வசிறிஸ்தான் மாகாணத்தில் கிளர்ச்சிவாதிகளுக்கெதிராகப் படையினர் கடந்த சில நாட்களாக நடத்திய படைநடவடிக்கையில் கிளர்ச்சிவாதிகளின் பல முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. கிளர்ச்சிவாதிகளில் பலர் கொல்லப்பட்டதுடன் அவர்களது மறைவிடங்கள் பலவும் அழிக்கப்பட்டதாகவும், கொல்லப்பட்ட கிளர்ச்சிவாதிகளில் ஆறு பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரும் பாகிஸ்தானியர்களெனவும் பாகிஸ்தான் இராணுவத்தளபதியான மேஜர் ஜெனரல் நியாஸ் கற்றாக் தெரிவித்தார்.

சுமார் ஏழாயிரம் படையினர் ஹெலிகொப்ரர் மற்றும் ஆட்லறிகளின் உதவியுடன் தமது படை நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

இதேவேளை, அல்கொய்டா அமைப்பின் தலைவரான ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானின் வசிறிஸ்தான் மாகாணத்தில் அமைந்துள்ள மலைப்பகுதிகளில் தான் மறைந்து வாழ்வதாக அமெரிக்கா தெரிவித்த கருத்தை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

ஒசாமா பின்லேடன் இப்பகுதிகளில் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அத்துடன் அவர் இப்பகுதிகளில் இருப்பதற்கான எந்தவொரு வதந்தியையும் நாம் கேட்கவில்லை எனவும் ஜெனரல் கற்றாக் தெரிவித்தார்.

படையினர் படை நடவடிக்கையை ஆரம்பித்தவுடன் கிளர்ச்சிவாதிகள் பாதுகாப்பான இடம் நோக்கித் தப்பியோடிவிட்டதாகவும் இந்த நடவடிக்கையில் 30 தொடக்கம் 40 வரையான கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாகவும் படையினர் தரப்பில் மூவர் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் படைநடவடிக்கையின் மூலம் வசிறிஸ்தான் மாகாணத்தில் முக்கால் பகுதி நிலப்பரப்பு தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இந்த வருடநிறைவிற்குள் முழுப்பகுதியும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இந்தப் பகுதி மிகவும் பெரியதெனவும் இங்கு மலைகள் உள்ளதனால் கிளர்ச்சிவாதிகள் மறைந்திருந்து வாழ்வதற்கான சாத்தியங்கள் அதிகமிருப்பதாகவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

# பலஸ்தீன நாட்டை உருவாக்க புஷ்ஷும், பிளேயரும் உறுதியளிப்பு

பலஸ்தீன நாடு உருவாக்க அமெரிக்க ஜனாதிபதி 'புஷ்ஷும், இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயரும் உறுதியளித்துள்ளனர்.

பலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத் மறைவு குறித்தும், பலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் - இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோர் நேற்றுமுன்தினம் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினர்.

அப்போது பலஸ்தீன ஜனநாயக நாடு உருவாக்க இருவரும் மீண்டும் சிபாரிசு செய்தனர். இஸ்ரேலுடன் சமாதானம் பாதுகாப்பு, மதசகிப்புத்தன்மை ஆகியவற்றோடு இணைந்து பலஸ்தீனர்கள் வாழவும் அவர்கள் சிபாரிசு செய்தனர்.



மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சுதந்திரம், சமாதானம், ஜனநாயகம் நிலவ வேண்டும் என்று அமெரிக்காவும், இங்கிலாந்தும் விரும்புகின்றன. இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகிய இரு ஜனநாயக நாடுகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து அமைதி மற்றும் பாதுகாப்புடன் அவற்றை நிலைநாட்ட வேண்டும் என்று விரும்புகிறோம் என்று பேச்சுவார்த்தைக்கு பின்னர் அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சமாதானமானது பாதுகாப்பான புதிய சூழ்நிலையை உருவாக்கவும் அதற்காக நாங்கள் தீவிர முயற்சியை மேற்கொண்டு குறிக்கோளை அடையவும் இதுதான் தருணம். அதற்குச் சில நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்க வேண்டிய தேவை உள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறியுள்ளனர்.

பலஸ்தீனர்கள் 60 நாட்களுக்குள் புதிய தலைவரை தேர்ந்தெடுக்க ஒத்துழைப்போம் என்றும் அதில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புஷ்ஷும், ரொனிபிளேயரும் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர். பலஸ்தீன நாடு அமைவதற்கு பெரிய வாய்ப்பு உள்ளது என்று அப்போது புஷ் தெரிவித்தார்.

பலஸ்தீன அரபாத்திற்கு பதில் புதிய தலைவரை தேர்ந்தெடுக்க உலக நாடுகள் உதவி செய்யவேண்டும். தேர்தலுக்குப் பின்னர் அவர்களுக்குத் தேவையான உதவிகளுக்ும் உலக நாடுகள் உதவவேண்டும் என்று ரொனி பிளேயர் அப்போது கேட்டுக்கொண்டார்.

## நேபாளத்திற்குத் தப்பிச்செல்ல முற்படுகையிலேயே ஜெயேந்திரர் இரவு 10 மணிக்குக் கைதானார்

### அரச சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவிப்பு



ஜெயேந்திரர்

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நேபாளத்திற்கு தப்பிச்செல்ல இருந்த வேளையிலேயே கைது செய்யப்பட்டதாக அரசதரப்பு சட்டத்தரணி நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஜெயேந்திரரை பிணை மனுவில் விடுதலை செய்யுமாறு கோரி நேற்று முன்தினம் நடந்த விசாரணையிலேயே அரசசட்டத்தரணி இவ்வாறு தெரிவித்தார். இந்த பிணைமனு மீதான விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

இந்தப் பிணைமனு மீதான விசாரணையில் ஜெயேந்திரர் சார்பாக டெல்கி சிரேஷ்ட சட்டத்தரணியும், முன்னாள் மத்திய நீதித்துறை அமைச்சருமான ராம்ஜெத்மலானி ஆஜராகியிருந்தார்.

இவரது வாதத்தில் - கைது செய்யப்பட்ட ஜெயேந்திரரை சந்திக்கச் சட்டத்தரணிகள் எவருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. அவருக்கு 70 வயதாகின்றது. நீரிழிவு, இரத்த அழுத்தம் உள்ளன. அதனால் அவருக்கு உணவில் கட்டுப்பாடுள்ளது. இவ்வாறான ஒருவரை கைது செய்தமை அவருக்கு மரணத்தை உண்டாக்கியது போலாகும்.

அத்துடன் அவரை இரவு பத்து மணிக்கு கைதுசெய்யவேண்டிய தேவை என்ன உள்ளது. அவர் எங்கும் ஓடிவிடமாட்டார். அவரை மடத்திலேயே வைத்து விசாரித்திருக்கலாம். அவரது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவரை வீட்டுக் காவலிலோ அல்லது மருத்துவமனையிலோ வைத்திருக்க வேண்டும். அத்துடன் சிறையில் இருக்கும் அவருக்கு உணவை சமைத்து உட்கொள்ள அனுமதியளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்குப்பதிலளித்த அரச சட்டத்தரணி கே.துரைச்சாமி.

ஜெயேந்திரர் நேபாளத்திற்கு தப்பிச் செல்லவுள்ளார் என்ற உறுதியான தகவல் கிடைத்த காரணத்தாலேயே அவர் இரவு பத்துமணிக்கு கைதுசெய்யப்பட்டார். அத்துடன் அவரை சட்டத்தரணிகள் எவரும் வேலூர் சிறைக்குச் சென்று சந்திக்கலாம் அதற்கான அனுமதியுள்ளது.

அவர் தனியாக உணவு சமைத்து உட்கொள்ள அனுமதிக்க முடியாது. அவருக்கு ஏதாவது நடந்தால் யார் பொறுப்பு அவரே உணவில் விஷத்தைக் கலந்து உட்கொண்டால் யார் பொறுப்பு. இவ்வாறு சம்பவம் ஏதும் நடந்தால் கடுமையான விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவர்களின் விவாதங்களைக் கேட்டறிந்த நீதிபதி பாலசுப்பிரமணியம் பிணைமனுமீதான வழக்கை 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, காஞ்சிமடத்திற்கு இந்திய மதிப்பில் 5000 கோடி சொத்துக்கள் இருப்பதாகவும் இந்தியாவில் மிகவும் சக்தி வாய்ந்த மனிதர்களான ஜனாதிபதி, பிரதமர் வரிசையில் காஞ்சி மடாதிபதியான ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜெயேந்திரர் பிணை மனுவிசாரணை நீதிமன்றுக்கு வெளியே தொண்டர்கள் மோதிக்கொண்டதில் பலர் படுகாயம்



ஜெயேந்திரர் பிணைமனு மீதான விசாரணையின்போது சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் இந்து முன்னணி தொண்டர்களும், சட்டத்தரணிகளும் சரமாரியாக மோதிக்கொண்டனர். இதில் பலர் படுகாயம் அடைந்தனர் இந்த மோதல்களால் உயர் நீதிமன்ற வளாகம் போர்க்களம் போல் காட்சி அளித்தது.

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் முகாமையாளர் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரரை தமிழக பொலிஸார் ஆந்திராவில் கைது செய்தனர். கைதான அவர் காஞ்சிபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வழக்கில் பிணை கோரி சென்னை உயர்நீதிமன்றில் ஜெயேந்திரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்தப் பிணைமனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது. அப்போது மக்கள் கலை இலக்கியக்கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் "காஞ்சி மடத்தை இழுத்து மூடு, சங்கர மடத்தின் பல கோடி சொத்துக்களை பறிமுதல் செய்" என்பது போன்ற பல வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை நீதிமன்ற வளாகத்தில் காண்பித்து கோசங்




களை எழுப்பினர்.

அப்போது அங்கிருந்த இந்துமுன்னணி தொண்டர்கள் இதனால் கோதிப்படைந்து அவர்களை பலமாகத்தாக்கினர். இதில் பலர் மண்டைஉடைந்து ரத்தம் சொட்டச் சொட்ட அலறி அடித்துக்கொண்டு ஓடினர்.

இச்சம்பவம் நடந்த சில நிமிடங்களில் பிணைமனு மீதான விசாரணை நாளை மறுதினம் ஒத்திவைக்கப்பட்டது. இது தெரிந்தவுடன் மேலும் கொதிப்படைந்த இந்து முன்னணியினர் - சட்டத்தரணிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

## கொடிகாமத்தில் நடந்த விபத்திலிருந்து மேலும் சில காட்சிகள்....



சடலத்தைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு!



வீதியை மறித்து ரயர்கள் எரிப்பு!



கண்காணிப்புக்குழு பிரதிநிதியுடன் ரவிராஜ் எம்.பி!

# எதிர்ப்புத் தெரிவித்த பொது...

கொடிகாமம் சந்திக்கும் இராமாவில் முருகன் கோவிலுக்கும் இடையிலுள்ள 53 ஆவது டிவிசன் இராணுவ முகாம் அருகே இராணுவத்தினரின் தண்ணீர் பௌசர் மோதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெருமளவான பொதுமக்கள் ஒன்று கூடிய போதும் - சம்பவம் நடந்த இடத்துக்கு பொதுமக்களைச் செல்ல விடாமல் படையினரும் பொலிஸாரும் தடுத்தனர்.

இதனால் பொதுமக்கள் ஆத்திர முற்ற நிலையில் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது.

இதற்கிடையில் இராணுவப் பொலிஸார், மற்றும் பொலிஸாரின் உதவியுடன் இறந்தவரின் சடலத்தைப படையினர் அகற்ற முற்பட்டபோது பொதுமக்கள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் நிலைமை மேலும் மோசமடையும் நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் இருவரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், கஜேந்திரன் ஆகியோரும் சென்றனர்.

இவர்கள் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்காக இருதரப்பினர்களுடனும் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்த நிலையில் - சாவகச்சேரி பதில் நீதிவான் சுப்பிரமணியம் கந்தசாமி அந்த இடத்துக்கு வந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜின் வாகனத்தில் சம்பவ இடத்துக்கு அழைத்து வரப்பட்ட பதில் நீதிவான் விசாரனைகளை நடத்திக் கொண்டிருந்த போது - பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு பொதுமக்களால் தீ வைக்கப்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பெருமளவான படையினர் பொதுமக்களை விரட்டியடிக்கும் நோக்கில் தடிகளால் தாக்கியதுடன், கண்ணீர் புகைக் குண்டுகளையும் வீசித் தாக்கினர்.

வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பொதுமக்கள் மீது படையினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தத் தொடங்கியதும் - அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் படையினர் மீது கற்களால் வீசித் தாக்குதல் நடத்தினர்.

இந்த மோதல்களில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மற்றும் கண்காணிப்புக் குழுவினரின் வாகனங்களும் சிக்கிக் கொண்டன. இதனால் இவர்களின் வாகனங்களும் சேதமடைந்தன.

நீண்ட நேரத்தின்பின்னர், பொதுமக்களைக் கலைத்துவிட்டு பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தச் சம்பவங்களை படம் பிடிக்க முற்பட்ட செய்தியாளர்களின் கமராக்களைப் படையினர் பறித்தெடுத்தனர். சிலரைத் தாக்கியதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில் நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் விசாரணைகளை நடத்திய பதில் நீதிவான் கந்தசாமி, சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பிரேதபரிசோதனைகளை நடத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதன்பின்னரே அந்தப் பகுதி நிலைமை ஓரளவுக்கு வழமைக்குத் திரும்பியது. நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவங்களில் பல பொதுமக்களும் பொலிஸார் ஒருவரும் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

நேற்றுக் காலைமுதல் இந்தப் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலைமையால் இந்த வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது. கொடிகாமம், கச்சாய், அல்லாரை வழியாகவே வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டன.

இதேவேளை, மேற்படி விபத்துக்குக் காரணமான இராணுவச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பவுசர் சாரதி திடீரென தனது வாகனத்தை பின்நோக்கி செலுத்தியதாலேயே பின் சக்கரங்களில் இந்து மதகுரு சிக்கி உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இதனிடையே, இந்தச் சம்பவம் குறித்து தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது - தமிழ்மக்கள் மீது இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டிருப்பதாகவும், இனிவரும் காலங்களிலும் மக்களை இனரீதியாக அடித்துக் கொல்வதை இராணுவத்தினர் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இல்லையேல் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமெனவும் அந்த அறிக்கையில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தச் சம்பவத்தில் செய்தியாளர் தாக்கப்பட்டதை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. (25,29,34)

## புலிகளின் நிர்...

எடுத்துப் பார்க்கும் போது 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட்மாதத்தில் ஒரு புதிய அரசியல் யாப்புக்கான வரைபு முன்வைக்கப்பட்டபோது நாடாளுமன்றத்தில் அந்த வரைபு கிழித்து தீயிடப்பட்டது. இப்படியான நிலை இந்த நாட்டில் இருக்கின்றது.

இந்த இரண்டு பிரதானகட்சிகளும் குறிப்பிட்ட முடிவை எடுப்பதற்கு தயங்கிக்கொண்டு இருக்கின்றன. வரலாற்று ரீதியான இந்த இரண்டு கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தில்தான் கூடிய கவனம் செலுத்தி வருகின்றன.

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் உரிமையினை அடக்கி வந்திருக்கின்றனர்.

சிங்கள முதலாளித்துவ கட்சிகள் இன்று கூட கருத்தியல் ரீதியில் தமிழ் மக்கள் ஒரு தனி இனம், தேசிய இனம் என்பதை ஏற்கத் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களை ஒரு தேசிய இனமாகக் கருதாமல் அவர்களை சிறுபான்மை இனம் என்றுதான் இன்றும் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முக்கியஸ்தர்கள்..

ஏற்கனவே ஒதுங்கியிருப்பதாகவும் அவர்கள் கூட விரைவில் நாட்டை விட்டு வெளியேறலாம் என்றும் தெரியவருகிறது.

மதன், ஜெகன், பாஸ்கரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக கடந்த காலத்தில் இருந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இவ்வாறானதொரு நிலையில் அமைச்சர் டக்ளஸின் வேறு சில செயற்பாடுகள் ஈ.பி.டி. பி.யின் உறுப்பினர்களால் தற்போது காரசாரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஈ.பி.டி.பி.யின் கொழும்பு அலுவலகத்தில் முக்கிய விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யிலுள்ள பெண்மணியொருவருக்கு பல கோடி ரூபா பெறுமதியான வீடு ஒன்றைக் கொழும்பில் வாங்கிக் கொடுத்தமை மற்றும் தனது தனிப்பட்ட நெருங்கிய தோழிக்கு கொழும்பில் இரண்டு வீடுகளை வாங்கிக் கொடுத்தமை ஆகியனவே ஈ.பி.டி. பி.யின் முக்கிய செயற்பாட்டாளர்களால் ஏனைய உறுப்பினர்களுக்கு விபரமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# புலிகளின்...

தொடர்பாக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டபுதிய யோசனைகள் குறித்து ஜனாதிபதியை சந்தித்து விளக்கிக் கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட புதிய யோசனை தொடர்பாக ஜனாதிபதி சாதகமான பதில் எதனையும் வழங்கவில்லை எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய யோசனைகள் குறித்து உயர்மட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்தி வருவதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே சமயம் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனை தொடர்பான பதிலை நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக ஒரு சில நாட்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைக்க ஜனாதிபதி தரப்பு எண்ணியுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சோதியம்மா



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சோதியம்மா 14.11.2004 பிற்பகல் 3.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலை சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருச்செந்தில்நாதன், திருவிக்கிரமநாதன் (லண்டன்) அவர்களின் அன்புத் தாயாரும், பத்மாஷினியின் அன்பு மாமியாரும் ஓய்வுபெற்ற அதிபர் சு.கனகசபாபதியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பொ.தில்லையம்பலம்

(984)

விசேட அறிவித்தல்
யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
கொழும்பு அப்பலோ மருத்துவமனை அவசர சிகிச்சை மருத்துவர் உங்களை 19,20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் சந்திக்கின்றார். சகல வித மருத்துவ ஆலோசனைகளுக்கும் அணுகவும் முன் பதிவிற்கு உடன் தொடர்பு கொள்ளவும்
திரு.புறாடி
அப்பலோ மருத்துமவனை,
தகவல் நிலையம்,
272, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி
077 308 2702
021 459 0500
C/3330

24 மணி நேர அவசர சிகிச்சை
அம்புலன்ஸ்
077 308 2702 / 011 453 1088 / 011 4531 1089
இருதயம் – சிறுநீரகம் – மூளை – எலும்பு முறிவு – கண்காதுமூக்கு – பொது அறுவைச் சிகிச்சை மற்றும் அனைத்து மருத்துவத்துறையும் ஒரே கூரையின் கீழ்!
தொலை பேசி
011 453 0000
அப்பலோ மருத்துவமனை,
578, எல்வெட்டிகல மாவத்தை,
கொழும்பு - 5.
C/3329

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.